பக்கங்கள் 25

# காலை முரசு

## புதிய அரசமைப்பு குறித்து ஜனாதிபதி ஏன் மௌனம்?

### எதிர்க்கட்சி விளக்கம்

“நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை அநுரகுமார திஸாநாயக்கவும் அனுபவிக்க 02 ▶



முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆடி 25 ஞாயிற்றுக்கிழமை 10.08.2025 | அதிர்வு 09



### முல்லைத்தீவில் சடலமாக மீட்கப்பட்ட இளம் குடும்பஸ்தர்:

# இராணுவத்தினர் மூவர் கைது! ஓக.19 வரை விளக்கமறியல்!!





(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டம், ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்துஜயன்கட்டுப் பகுதியில் இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுத் தாக்கப்பட்ட பின்னர் காணாமல்போன இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் 3 இராணுவத்தினர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி த.பிரதீபன் உத்தரவிட்டுள்ளார். 02 ▶




புதிய அரசு அமைக்கப்பட்டு இன்னும் ஓராண்டு கூட முடியவில்லை. அதற்கிடையில் உள்வீட்டுக் களேபரம் உச்சம் பெறத் தொடங்கி இருப்பதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தேசிய மக்கள் சக்தி அரசில் பிரதான பங்காளி ஜே.வி.பி. ஆனால், நாட்டின் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஜே.வி.பியின் உறுப்பினர் அல்லர். தேசிய மக்கள் சக்தியின் கூட்டுத் தரப்பின் பிரதிநிதி அவர்.

அவருக்கு எதிராக ஜே.வி.பியின் மூத்த உறுப்பினர்கள் உள்வீட்டுக் கலகம் நடத்தி வருகின்றனர் எனச் செய்திகள் வெளியாகி உள்ளன.

ஜே.வி.பியை அரசுக்கு வெளியில் இருந்து இயக்கி வரும் 02 ▶



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரகசியம் பரகசியம்...**

கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா ஏற்கனவே பிரதமருக்கு எதிரான காய் நகர்த்தல்களை முன்னெடுத்து வருகிறார்.

அரசுத் தரப்பில் அதிகம் துள்ளி குதிக்கும் சபை முதல்வரான பிமல் இரத்நாயக்கா ஏற்கனவே பகிரங்கமாக பிரதமருக்கு எதிராகக் கருத்து தெரிவித்து வருகின்றமை தெரிந்த விடயம்தான்.

இப்போது அரசுக்குள்ளும் கட்சிக்குள்ளும் அடிக்கடி சர்ச்சைகளை உருவாக்கி வரும் அமைச்சர் வசந்த சமரசிங்கவும் பிரதமருக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தி இருக்கின்றார் எனக் கூறப்படுகிறது.

ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அவரது மகன்களில் ஒருவரான ரோஹித ராஜபக்ஷவின் பங்களிப்போடு உருவாக்கப்பட்ட செய்மதி ஒன்று வெளிநாட்டில் இருந்து ராக்கெட் மூலம் விண்ணுக்கு ஏவப்பட்டிருந்தது. அது தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது.

முதலீட்டு சபையின் பதிவுகளின் அடிப்படையில், அந்த கேள்விக்குப் பிரதமர் பதிலளித்தார். அந்தத் திட்டத்தில் அரசுக்கு செலவினம் எதுவும் ஏற்படவில்லை என்றும், மாறாக, அரசுக்கு வருமானம் வந்தது என்றும் பிரதமர் நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

ஆனால், அவரது அமைச்சரவையில் அவரின் கீழ் இருக்கும் அமைச்சர் வசந்த சமரசிங்கவோ, 24 மணி நேரம் கழித்து, நாடாளுமன்றத்தில் எழுந்து, பிரதமர் கூறிய கருத்து தவறு என்றார். பெருமளவில் நிதி மோசடி அந்தத் திட்டத்தில் இடம்பெற்று இருப்பதாக அவர் அறிவித்தார்.

இது, நாடாளுமன்றத்தில் அமைச்சரவைக்கும் அரசுக்கும் தலைமை வகிக்கின்ற பிரதமருக்கு நேரடியாகச் செய்யப்பட்ட அவமானப்படுத்தல் நடவடிக்கை எனக் கருதப்படுகிறது.

பிரதமர் நாடாளுமன்றத்தில் அரசுப் பக்கத்தில் தலைவர். அரசின் இரண்டாவது தலைவரும் அவரே. அவரின் கருத்தை நாடாளுமன்றத்தில் அவரின் கீழ் இயங்கும் அமைச்சர் ஒருவர் தவறான செய்தி என்று குற்றம் சுமத்துவது பிரதமரை அபகீர்த்திக்கு உட்படுத்தும் விடயம் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

* * *

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருந்த போது ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற பல்வேறு செலவினங்கள் தொடர்பில் தற்போதைய ஆட்சியாளர்கள் துருவித் துருவி விசாரணை நடத்தி ஆராய்ந்து வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

ஏற்கனவே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர், தனிப்பட்ட செயலாளர், அவரது ஜனாதிபதி செயலக பணியாள் தொகுதியின் பிரதானி ஆகியோர் குற்றப் புலனாய்வாளர்களினால் தொடர்ந்து குடையப்பட்டிருக்கிறார்கள். ரணிலுக்குப் பெரும் நெருக்கடி காத்திருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

தமது மாமனார் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன போல ரணில் விக்கிரமசிங்கவும் 'கிழட்டு நரி' என்றே அழைக்கப்படுகிறார். இப்போதைய ஆட்சியாளர்கள் கிழட்டு நரியைக் கூண்டுக்குள் அடைப்பார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

---

**புதிய அரசமைப்பு...**

ஆரம்பித்துள்ளார்போலும். அதனால் தான் அவரது நாடாளுமன்ற உரையில் புதிய அரசமைப்பு பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"புதிய அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்துவதற்காக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம், தேர்தல் முறைமை மாற்றம் உள்ளடங்கலாக புதிய அரசமைப்பு விரைவில் இயற்றப்படும் எனத் தேசிய மக்கள் சக்தி உறுதியளித்திருந்தது.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் ஒன்றரை மணிநேரம் உரையாற்றினார். எனினும், புதிய அரசமைப்பு பற்றி அவர் வாய் திறக்கவில்லை.

எனவே, புதிய அரசமைப்புக்குரிய சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை அமைக்குமாறு யோசனை முன்வைக்கப்படவுள்ளது. இது தொடர்பில் எமது கட்சி முடிவெடுத்துள்ளது.

அரசின் இறுதிக் காலகட்டத்தில் புதிய அரசமைப்புக்குரிய பணியை முன்னெடுக்க முடியாது. அரசுக்குரிய செல்வாக்கும் இருக்கும்போதே அதற்குரிய பணி ஆரம்பிக்கப்பட வேண்டும்." – என்றார்.

---

**இராணுவத்தினர்...**

அதேவேளை, உயிரிழந்த இளம் குடும்பஸ்தரின் சடலம் நீதிபதியின் உத்தரவுக்கமைய உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. உடற்கூற்றுப் பரிசோதனை இன்று இடம்பெறவுள்ளது.

முத்துஐயன்கட்டு இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஐவரில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டதுடன் மற்றுமொரு நபர் முதுகுப் பகுதியில் பலத்த அடிகாயங்களுடன் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். ஏனைய 3 நபர்களும் இராணுவத்தினரின் தாக்குதலுக்கு இலக்காகி அவர்களின் பிடியிலிருந்து தப்பி வந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மன்னார் கருநீலம் போராட்டத்துக்கு ஆதரவாக

# யாழ். பண்ணை கடற்கரையில் இன்று அணிதிரளுமாறு அழைப்பு

மன்னார் கருநீலம் போராட்டத்துக்கு ஆதரவாக யாழ்ப்பாணம் – பண்ணை கடற்கரையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு அணிதிரளுமாறு இயற்கையின் நண்பர்கள் இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"மன்னார் தீவு 26 கிலோமீற்றர் நீளமும், 6 கிலோமீற்றர் அகலமும் கொண்ட 140 சதுர கிலோமீற்றர் பரப்பைக் கொண்ட ஒரு தீவாகும். இந்தத் தீவினுடைய சராசரி உயரமாக 7.8 மீற்றர் காணப்படுகின்றது. இருந்தாலும் இந்தச் சராசரி உயரம் என்பது எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியானதாக இல்லை. சில பிரதேசங்களில் மிகக் குறைவான உயரம் கொண்டதாக அதாவது கடல் மட்டத்தைவிட உயரம் குறைந்ததாகவே காணப்படுகின்றது.

தாழ்வுப்பாடு எழுத்தூர், சவுத் பார், தோட்டவெளி, எருக்கலம்பிட்டி, கொன்னையன் குடியிருப்பு, தாராபுரம், செல்வா நகர் போன்ற பிரதேசங்களின் சராசரி உயரம் கடல்மட்டத்தைவிட குறைவாக அல்லது அதற்கு அண்மித்ததாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, சில பிரதேசங்களில் கடல் மட்டத்தைவிட 12 மீற்றர் உயரம் கொண்டதாகவும் காணப்படுகின்றது. மன்னாரின் கனிய மணல் அகழ்வுக்காக விண்ணப்பித்திருக்கின்ற அனைத்து நிறுவனங்களுமே கடல் மட்டத்திலிருந்து 12 மீற்றர் ஆழம் வரைக்கும் மணல் அகழ்வை மேற்கொள்ளவுள்ளதாகவும், அகழப்பட்ட மணலில் கனிமங்கள் மட்டும் தனித்துப் பிரித்தெடுக்கப்பட்டு பின்னர் மிஞ்சிய மணல்கள் மீண்டும் அகழப்பட்ட இடத்திலே கொட்டப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

தொடர்ச்சி▼

# யாழ். பண்ணை கடற்கரையில்...

**தொடர்ச்சி▲**

ஆனால், மன்னார் தீவினுடைய சராசரி உயரம் கடல் மட்டத்தில் இருந்து 7.8 மீற்றர். ஆனால், 12 மீற்றர் அகழப்பட்டால் அது அகழப்படும் இடம் முழுவதும் கடல் மட்டத்தில் இருந்து சராசரியாக 10 அடி ஆழத்தில் தோண்டியதற்குச் சமமாகவே அமையும்.

அகழ்வுக்காக முன்மொழியப்பட்ட மூன்று பிரதானமான இடங்களிலும் பல சதுர கிலோமீற்றர் பரப்புக்கு 10 அடி ஆழத்துக்குத் தோண்டியதற்குச் சமனாகும்.

இந்த 10 அடி ஆழத்துக்கும் கடல்நீர் உள்வந்து நிறைந்துவிடும். குறிப்பாக மன்னாரில் கனிய மணல் அகழ்வினால் மன்னார் தீவின் உருவவியல் வேறு மாதிரி மாறிவிடும், தரைக்கீழ் நீர்வளம் முழுமையாகப் பாதிக்கப்படும், மன்னார் தீவு முழுவதும் 10 அடி பள்ளமாக மாறி அந்தப் பள்ளம் முழுவதும் கடல்நீரால் நிரப்பப்படும்.

அலைகளால் கொண்டுவந்து படிய விடப்பட்டுள்ள மணல் படிவுகள் இன்று மன்னார் மாவட்டத்தின் இருப்புக்கே சவால் விடுகின்ற அளவுக்கு மாறியுள்ளது.

எனவே, மன்னார் தீவின் இயற்கை வளங்களைக் காப்பதற்காக மன்னாரில் இளையோர்கள் ஆரம்பித்துள்ள கருநிலம் என்கின்ற போராட்டத்துக்கு ஆதரவாக யாழ்ப்பாணம் - பண்ணை கடற்கரையில் இன்று (10.08.2025) பிற்பகல் 3 மணிக்கு இயற்கையையும், கனிய வளங்களையும் நேசிக்கும் ஒவ்வொருவரையும் திரண்டு வந்து மன்னார் மக்களுக்கு ஆதரவுக் கரம் கொடுக்க முன்வருமாறு இயற்கையின் நண்பர்கள் இயக்கம் அழைப்பு விடுகின்றது." - என்றுள்ளது.

# மன்னார் ஆஸ்பத்திரியில் சிந்துஜா மரணம் தொடர்பில் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட ஐவரில் மூவர் கைது!

## விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த மரியராஜ் சிந்துஜா என்ற பட்டதாரியான இளம் குடும்ப பெண் மரணத்துடன் தொடர்புடையவர்கள் எனப் பணி நீக்கம் செய்யப்பட்ட வைத்தியர் ஒருவர் உள்ளடங்கலாக ஐவரில் மூவர் நேற்றைய தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என சட்டத்தரணி பா.டெனிஸ்வரன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் கடந்த வருடம் ஜூலை மாதம் 28 உயிரிழந்த மரியராஜ் சிந்துஜா என்ற பட்டதாரியான இளம் குடும்ப பெண்ணின் மரணத்திற்கு நீதி கோரி வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

மருத்துவக் கவனயீனத்தால் ஏற்பட்ட அதீத இரத்தப்போக்கு காரணமாக இந்த இளம் தாயின் மரணம் சம்பவித்துள்ளது என மருத்துவ பரிசோதனை அறிக்கை வெளி வந்தது.

இந்த நிலையில் கடமையில் இருந்த வைத்தியர் ஒருவர் உள்ளடங்கலாக இரண்டு தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் இரண்டு குடும்ப நல உத்தியோகத்தர்கள் என அந்த ஐவரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட நிலையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் இந்த ஐவரில் தாதிய உத்தியோகத்தர் ஒருவரும், இரண்டு குடும்ப நல உத்தியோகத்தர்களும் மன்னார் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நிலையில் நேற்றைய தினம் சனிக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இதன் போது மன்னார் நீதிவான் அந்த மூவரையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

மேலும் சந்தேக நபரான வைத்தியர் ஒருவரையும் ,தாதிய உத்தியோகத்தர் ஒருவரையும் கைது செய்ய உயிரிழந்த மரியராஜ் சிந்துஜா சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

இந்த நிலையில் குறித்த வழக்கு விசாரணை மீண்டும் எதிர்வரும் 12ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

# ஞாயிறன்று கடைகளைப் பூட்டுவது தொடர்பில் வவுனியா வர்த்தக சங்கம் திரிசங்கு நிலையில்!

**(வவுனியா நிருபர்)**

வர்த்தகர்களின் நன்மைக்காக சங்கத்தை வைத்துக் கொண்டு எப்படி கடைகளை பூட்டுமாறு கூற முடியும் என வவுனியா வர்த்தகர் சங்கத்தின் உப தலைவர் எம்.கே.ஆரிப் தெரிவித்தார்.

வவுனியாவில் வர்த்தக நிலையங்களை ஞாயிற்றுக் கிழமைகளில் மூடுமாறு வவுனியா மாநகர சபை வேண்டுகோள் விடுத்துள்ள நிலையில் வர்த்தகர் சங்கத்தின் மாதாந்த கூட்டத்தில் அது குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா வர்த்தகர்களின் நலன் கருதியும் அங்கு பணியாற்றும் ஊழியர்களின் நலன் கருதியும் வற்புறுத்தல் இல்லாது கடைகளை பூட்டி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கியதை கடந்த காலங்களில் நாங்கள் பார்த்திருக்கின்றோம்.

ஆனால், இப்போது வந்துள்ள மாநகர சபை அதனை நன்றாகவே செய்வதற்கு தீர்மானித்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக நாங்கள் வர்த்தகர் சங்கம் என்ற ரீதியில் பல வர்த்தகர்களிடம் மறைமுகமாக கேட்டபோது கடைகளை பூட்டுவதனால் ஏற்படும் சாதகம் தொடர்பாகவும், அதனால் ஏற்படும் பாதகம் தொடர்பாகவும் பலர் கருத்துக்களை தெரிவித்து இருந்தார்கள்.

இந்நிலையில் எல்லாவற்றிற்கும் பொதுவாக சட்டத்தை பார்த்தால் தொழில் ஸ்தாபனத்தினை பல வந்தமாகவோ அல்லது அன்பாகவோ பூட்டச் சொல்லுகின்ற சட்டம் அல்லது அதிகாரம் எங்களுக்கு இல்லை.

ஆகவே, நட்பு ரீதியான ஓர் இணக்கப்பாட்டைச் செயல்படுத்தவே நாங்கள் விரும்புகிறோம். மாநகர சபை எடுக்கின்ற முயற்சிக்கு ஒத்துழைப்பாக இருக்க வேண்டும் என்பது எங்களுடைய விருப்பம். இது தொடர்பில் மற்றவர்களிடம் கேட்கின்ற போது பல்வேறு கருத்துக்கள் வருவதன் காரணமாக பொதுச் சபையைக் கூட்டி ஒரு கருத்துக் கணிப்பின் ஊடாகவோ அல்லது வாக்கெடுப்பின் ஊடாகவோ ஒரு நிலைப்பாட்டினை எடுத்து பெரும்பான்மையினுடைய நிலைப்பாட்டின் அடிப்படையில் அதற்கு இணங்கிப் போகின்ற நிலைமை எமக்கு இருக்கிறது.

எனினும் இன்றைய கூட்டத்தில் எந்த விதமான ஒரு முடிவுக்கும் வர முடியாமல் போய் உள்ளது. ஆகவே மாநகர சபை முதல்வர் மற்றும் பிரதி முதல்வரை சந்தித்து அவர்களுடைய நிலைப்பாடு இவ்வாறு நாளுக்கு நாள் சீரான நடைமுறையில் அமையும் என்று அவர்கள் கருத்து சொன்னால் பொதுச் சபையை கூட்டி வாக்கெடுப்பு நடத்தும் நிலைப்பாட்டில் இருந்து நாங்கள் விடுபட நினைக்கிறோம். அல்லது கடைகளை திறக்கும் விடயத்தில் உத்தியோபூர்வமாக விருப்பத்தை கேட்டு எமக்கு ஒரு முடிவை எடுத்துத் தாருங்கள் என வற்புறுத்தினால் நாங்கள் பொதுச்சபையைக் கூட்டுவோம்.

அவர்கள் கடைகளை பூட்ட சொல்வதும் சட்டமாக சொல்லவில்லை. ஆகவே நாங்களும் பலவந்தம் இல்லாமலே செய்வதற்கு பார்க்கிறோம். ஒரு தொழில் ஸ்தாபனத்தினை பூட்டுமாறு கூறுவதற்கு நீங்கள் யார்? வர்த்தகர்களின் நன்மைக்காக சங்கத்தை வைத்துக் கொண்டு எப்படி கடைகளை பூட்டுமாறு கூற முடியும்? தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்குவது வேறு, தொழில் ஸ்தாபனத்தை மூடுவது என்பது வேறு என்றெல்லாம் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆகவே, சட்டத்தில் இல்லாத ஒரு விடயத்தை வலுக்கட்டாயமாக செய்யுமாறு கூறி நாங்கள் சிக்கலில் மாட்டிக் கொள்ள விரும்பவில்லை. இதில் நூறு வீதம் ஒற்றுமைப்பட்டு எல்லோரும் ஒரு முடிவுக்கு வந்தால் நாங்கள் அதில் ஒரு பங்காளியாக இருப்போம். மாநகர சபையின் முயற்சிக்கும் நாங்கள் ஒத்துழைப்பாக இருக்கவே தற்போது விரும்புகிறோம். - எனத் தெரிவித்தார்.

# முல்லைத்தீவு சம்பவம்: நீதி நிலைநாட்டப்படும்

## ஜெகதீஸ்வரன் எம்.பி. உறுதி



(கி.வசந்தன்)

முல்லைத்தீவு, முத்துஜயன்கட்டு இராணுவ முகாமுக்குள் சென்ற இளைஞர்கள் தாக்கப்பட்டமை மற்றும் அவர்களில் ஒருவர் மரணமடைந்தமை தொடர்பில் நீதியான விசாரணை நடத்தப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முத்துஜயன்கட்டு இராணுவ முகாமுக்குள் சென்ற 5 இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்றும், அவர்களில் நால்வர் தப்பி வந்த நிலையில் மற்றைய இளைஞர் முத்துஜயன்கட்டு குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பில் நேற்று கருத்துத் தெரிவித்தபோதே ஜெகதீஸ்வரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களுடன் தொலைபேசி ஊடாக உரையாடியதுடன் அவர்களது கருத்துக்களையும் கேட்டறிந்து கொண்டேன்.

இது தொடர்பில் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் முல்லைத்தீவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பிரதேச செயலாளர் ஆகியோருடன் தொலைபேசியில் பேசியிருந்தேன்.

பொலிஸார் இது தொடர்பில் நீதியான வகையில் விசாரணைகளை முன்னெடுப்பதாகத் தெரிவித்துள்ளனர். அத்துடன் எமது உயர் மட்ட அமைச்சர்களுக்கும் இது தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளேன். அவர்களும் இது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளனர்.

ஆகவே, இந்தச் சம்பவம் தொடர்பில் எமது தேசிய மக்கள் சக்தி அரசு விசாரணைகளை மேற்கொண்டு உண்மைத் தன்மையை வெளிப்படுத்தி, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்போம்.” – என்றார்.

# இளைஞரின் உயிரிழப்புக்கு இராணுவம் காரணமாகின் இலங்கை அரசின் இறுதித் தருணம் இதுவாக இருக்கும்!

## வவுனியா மாநகர துணை மேயர் கார்த்தீபன் எச்சரிக்கை

(பா.சதீசன்)

யுத்தம் முடிந்து ஒன்றரை தசாப்த காலம் முடிந்தும் இலங்கை இராணுவத்தினரது ஒருசில நடத்தைகளும் செயற்பாடுகளும் மிகவும் வேதனைக்குரியதும் கண்டிக்கத்தக்கதுமானதாகும் என்று வவுனியா மாநகர சபையின் துணை மேயர் பரமேஸ்வரன் கார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, முத்துஜயன்கட்டு குளத்தில் இளைஞரின் சடலம் மீட்கப்பட்டமை தொடர்பாக வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“முல்லைத்தீவு பகுதியில் இலங்கை இராணுவம் வெளியேறும் பகுதியில் உள்ள பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஐந்து இளைஞர்களை அழைத்த இராணுவம், குறித்த முகாம்அமைந்திருந்த பகுதியில்வைத்து இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும், அதிலிருந்து 4 இளைஞர்கள் தப்பியோடியதாகவும், ஒருவர் மாத்திரம் வெளிவரவில்லை எனவும், அந்த நபருடைய சடலமே குளத்திலிருந்து மீட்கப்பட்டதாகவும் என்று அவர்களது உறவினர்கள் மற்றும் ஊடகங்களூடாகச் செய்திகளை காணமுடிந்தது.



மேற்படி இளைஞரின் மரணத்துக்கு இலங்கை இராணுவமே காரணமாக இருப்பின் அது வன்மையாகக் கண்டிக்கத்தக்க விடயமாகும்

இலங்கையின் தற்போதைய அரசு தங்களை ஒரு விடிவெள்ளி போலும், இன, மத, பேதமின்றி சகல மக்களுக்குமான நீதியான அரசைக் கட்டியெழுப்புவோம் எனக் கூறி, அதை நம்பி வாக்களித்து வென்ற இந்த அரசு இன்று வரை பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இன்னமும் அகற்றாமல், ஓர் அரசியல் கைதியையேனும் விடுவிக்காமல், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கண்ணீருக்கு எந்தவோர் ஆறுதலைக்கூட வழங்க முடியாமல் இருக்கின்றது. இந்த அரசு மீது இப்போது அவநம்பிக்கை மக்கள் மத்தியில் பரவி வருகின்றது

இலங்கை அரசு என்பது எப்போதும் தமிழர்களுக்கான நீதியை வழங்காது என்பது எமது கண்முன் புலப்படுகின்றது.

கடந்த காலங்களில் எனது கட்சியும் அரச சர்பாக இருந்திருப்பினும், அரசு தமிழர்களுக்கு எதிராகச் செயற்படும் போது அதற்கு எதிராகவும் குரல் கொடுத்தவர்கள் என்பதை இங்கு பகிரங்கமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதேவேளை, மேற்படி இளைஞரின் மரணத்துக்கு இலங்கை இராணுவம் காரணமாக இருப்பின், வடக்கு - கிழக்கு தமிழர் தாயக பூமியில் உள்ள, தமிழ்ப் பேசும் மக்கள் மாத்திரம் அல்ல, இலங்கை முழுவதும் உள்ள அனைத்து தமிழ் பேசும் உறவுகளும், இலங்கை அரசின் காட்டுமிராண்டித்தனத்துக்கு எதிராக நிச்சயம் ஜனநாயக ரீதியில் மாபெரும் எழுச்சிப் போராட்டத்தை ஆரம்பிப்பார்கள் என்பதை இந்த அரசுக்கு ஆணித்தரமாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.” – என்றுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மீண்டும் பழைய கதை!

“நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை அநுரகுமார திஸாநாயக்கவும் அனுபவிக்க ஆரம்பித்துள்ளார் போலும். அதனால்தான் அவரது நாடாளுமன்ற உரையில் புதிய அரசமைப்புப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.” - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்திருக்கின்றார்.

அவரது கூற்று முற்றிலும் உண்மை. கிடைத்த அதிகாரத்தின் சுவையைக் கைவிட யாருக்கு மனம் வரும்?

”புதிய அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்துவதற்காக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம், தேர்தல் முறைமை மாற்றம் உள்ளடங்கலாக புதிய அரசமைப்பு விரைவில் இயற்றப்படும் என தேசிய மக்கள் சக்தி தேர்தலுக்கு முன்னர் உறுதியளித்திருந்தது.

“ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் இப்போது ஒன்றரை மணிநேரம் உரையாற்றினார். எனினும், புதிய அரசமைப்பு பற்றி அவர் வாயே திறக்கவில்லை. எனவே, புதிய அரசமைப்புக்குரிய சட்டமூலத்தை தயாரிப்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை அமைக்குமாறு யோசனை முன்வைக்கப்படவுள்ளது. இது தொடர்பில் எமது கட்சி முடிவெடுத்துள்ளது. அரசாங்கத்தின் இறுதிக் காலகட்டத்தில் புதிய அரசமைப்புக்குரிய பணியை முன்னெடுக்க முடியாது. அரசுக்குரிய செல்வாக்கும் இருக்கும்போதே அதற்குரிய பணி ஆரம்பிக்கப்பட வேண்டும்.” - என அஜித் பி பெரேரா எம்.பி. மேலும் குறிப்பிட்டார்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றுவோம், அரசமைப்பைப் புதுசாக உருவாக்குவோம் என்றெல்லாம் வாக்குறுதி கொடுத்து, அதிகாரத்துக்கு வந்த முதலாவது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அல்லர்.

அவருக்கு முன்னரே ஜனாதிபதிகள் சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க எல்லோரும் மக்களுடன் எழுத்து மூலமாக அத்தகைய உடன்பாடு ஒன்றுக்கு வந்த பின்னர்தான் ஜனாதிபதியானார்கள்.

ஆனால், அவர்கள் யாருமே இது விடயத்தில் நேர்மைத் திறனுடன் செயல்படவில்லை. ஆக, மைத்திரிபால சிறிசேன மட்டும் தமது நிறைவேற்றதிகாரத்தைக் கணிசமான அளவு குறைப்பதற்கான அரசமைப் புத் திருத்தத்துக்கு இணங்கிச் செயற்பட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோ தாம் அதிகாரத்துக்கு வந்தால் ஒரு தடவையோடு நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்பேன் என்று மக்களுக்கு வாக்குறுதி கொடுத்து, அதனடிப்படையில் வென்று அதிகாரத்துக்கு வந்தார். ஆனால் அந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு மேலும் அதிகாரங்களை அவர் குவிக்கச் செய்தமையுடன், மூன்றாவது தடவையும் தாம் ஜனாதிபதியாவதற்கு முயற்சி எடுத்தார்.

எல்லோரும் பதவிக்கு வரும் முன்னர் அந்தப் பதவியை ஒழிப்போம் என்றுதான் கூறுகிறார்கள். ஆனால் அந்தப் பதவியை அனுபவிக்க தொடங்கியதும், அந்த ஆசை அவர்களை விடுவதில்லை. அதற்கு அநுரகுமார திஸாநாயக்கவும் விதிவிலக்கல்லர் போலும்.

இப்போது இந்த ஆட்சியின் அதிகாரத்தை ருசிக்க தொடங்கிய அவர், இந்த அரசாங்கத்தின் கடைசிக் காலத்தில் அரசமைப்பு மாற்ற முயற்சி என்று ஒரு நாடகமாடி காலத்தை ஓட்டுவார். அடுத்த தடவையும் ஜனாதிபதியாக முயற்சி எடுப்பார். அதற்காக இந்த ஆட்சி காலத்தில் அரசமைப்பு மாற்றத்தைக் கொண்டு வராமலேயே, கொண்டு வருபவர் போல இழுத்தடிப்பார். இதெல்லாம் முன்னைய ஜனாதிபதிகளிடம் இலங்கை மக்கள் கண்டவைதான். அவர்களில் இருந்து அநுரகுமார திஸாநாயக்கவும் வேறுபட்டவர் அல்லர்.

பழைய கதை திரும்பவும் எழுதப்படுகின்றது. அவ்வளவுதான்...!



# பொய்யுரைக்கிறது தமிழரசுக் கட்சி!

## சீறுகின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

ஐ.நாவிற்கு கடிதம் அனுப்பும் விவகாரத்தில் தமிழரசுக் கட்சியே பொய்யுரைத்தாக குற்றம் சாட்டியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழ்க்கட்சிகளிடையே இப்போது இணக்கப்பாட்டை ஏற்படுத்த தவறினால் தமிழ்த் தேசியம் அழியும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம், கொக்குவிலில் உள்ள முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடக சந்திப்பின் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

ஐ.நா. சம்பந்தப்பட்ட விடயத்தில் தமிழ்த் தேசிய கட்சிகள், சிவில் அமைப்புக்கள் எனப் பலரும் ஒன்றிணைந்து கடிதமொன்றை அனுப்பும் முயற்சியை நாங்கள் முன்னெடுத்திருந்தோம்.

அதாவது தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைக்கு சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வலியுறுத்தி கட்சிகள், சிவில் அமைப்புக்கள் என பலரது இணக்கத்துடன் கடிதத்தையும் தயாரித்து ஐ.நாவிற்கு அனுப்பியுள்ளோம்.

இந்தக்கடிதத்தில் உள்ள விடயங்களில் தமிழரசுக் கட்சியும் இணக்கம் தெரிவித்து தாமும் கையொப்பம் வைப்பதாக தெரிவித்திருந்தது. அதற்கமைய ஆரம்பகட்ட பேச்சுக்களும் நடைபெற்றன. எனினும் இறுதியில் தமிழரசுக் கட்சி பொய்களைக் கூறியுள்ளது.

இதனால் இரு தரப்பிற்கும் இடையில் ஒரு புரிந்துணர்வு ஏற்படுத்தும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக இந்த கடிதத்துடன் தான் இணங்குகின்றார் எனவும், கட்சித் தலைவர்தான் குழம்புகின்றார் எனவும், எப்படியாயினும் யாழில் நடக்கும் கூட்டத்தில் பேசி ஒரு முடிவிற்கு கொண்டு வருவோம் எனவும் அக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் கூறினார்.

அவ்வாறாயின் இக் கடிதத்தை மேலும் பலப்படுத்துவதாக இருந்தால் பரவாயில்லை எனவும், அதில் வெட்டி திருத்தம் என்றால் தாமதம் ஏற்படும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டது. மேலும் கடிதத்தின் தரத்தை குறைக்க முடியாது, தரத்தை கூட்டுவதாக இருத்தல் தாமதித்தாலும் பரவாயில்லை எனவும் கூறப்பட்டிருந்தது.

ஆனால் யாழில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் முடிவடைந்த பின்னர் நடாத்திய ஊடக சந்திப்பின் போது இதுவரையும் எங்களுக்குள் பேசப்பட்ட விடயங்களுக்கு மாறாக அப்பட்டமான பொய்களை சுமந்திரன் சொல்லியுள்ளார்.

அதேநேரம் தமிழரசுக் கட்சி கூட்டம் முடிவடைந்த பின்னர் எங்களுக்கிடையே சந்திக்க இணங்கியிருந்தும் அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டும் தாம் சந்திப்பிற்கு வரவில்லை என எமக்கு அறிவிக்ககாமலே சந்திப்பை தவிர்த்திருந்தனர்.

இதன் பின்னரே நாம் அந்தக் கடித்தை அனுப்பினோம்.

அதற்கு பிற்பாடு 7 ஆம் திகதி கொழும்பில் 5 மணிக்கு எனது இல்லத்தில் சந்திக்க இணங்கியிருந்தோம். அதாவது காண்டீபனுக்கு சத்தியலிங்கம் சந்திக்கிறார் என மெசேஜ் ஒன்றும் அனுப்பப்பட்டது.

இதற்கமைய அவர்கள் தொடர்ந்தும் சந்திக்க விருப்பம் என்றால் அடுத்த வாரம் யாழில் சந்திக்கலாம் என நாங்கள் சொல்லியுள்ளேம்.

இவ்வாறு நாங்கள் வெளிப்படைத் தன்மையாக நேர்மையுடன் இயங்க விரும்புகிறோம். ஆனால் அவர்கள் தான் திட்டமிட்ட பொய்களை சொல்லி உள்ளனர்.

அவர்களது இந்தப் பொய்களை தெளிவுபடுத்தவே இந்த சந்திப்பை நடாத்துகிறோம். ஏனெனில் தமிழர் தரப்பில் உள்ள அனைவருமாக இந்தக் கடிதம் எழுதுவதில் நாங்கள் தான் முன்னின்றோம். தொடர்ந்தும் அந்த முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

குறிப்பாக இந்த 5 வருசம் தமிழ் தேசியம் முன்னோக்கி செல்ல போகிறதா, பின்னோக்கிச் செல்லப் போகிறதா என்ற ஆபத்து ஏற்பட்டு உள்ளது. தமிழ்த் தேசியம் பாதுகாக்கப்பட்டு முன்னோக்கி பயணிக்க வேண்டுமாக இருந்தால் தமிழரசுக் கட்சி உட்பட நாம் அனைவரும் கட்டாயம் இணக்கப்பாட்டிற்கு வர வேண்டும்.

இவ்வாறு ஐந்து வருடத்தில் நாங்கள் ஒரு பொது நிலைப்பாட்டிற்கு வராவிட்டால் தமிழ் இனம் அழியும். ஆகவே தமிழினத்தை பாதுகாக்க எங்களுக்கிடையே நிச்சயம் இணக்கபாட்டை ஏற்படுத்தவேண்டும். அவ்வாறான இணக்கப்பாட்டை ஏற்படுத்த நாங்கள் தொடர்ந்தும் முயற்சிப்போம்.

எனவே திட்டமிட்ட பொய்களை – குற்றச்சாட்டுக்களை – விடுத்து இனத்திற்காக இணங்கிச் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

பொறுப்பு கூறல் சம்பந்தபட்ட விடயத்தில் சர்வதேச குற்றவியல் விசாரணை வேண்டுமாக இருந்தால் எழுத்து மூலமாக தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதனை வெளிப்படுத்த வேண்டும்.

தமிழ் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் என ஒருமித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையை வலியுறுத்தி வருகின்ற நிலையில் தமிழரசுக் கட்சி அதற்கு மாறாக இருக்கிறது.

தமிழர் தரப்பாக ஒருமித்து செயற்பட வேண்டிய இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சி தாம் தனித்து ஒரு நிலைப்பாட்டை எடுக்கிறது. தமிழரசுக் கட்சியில் எட்டு எம்.பிக்கள் இருக்கின்றனர். தவிர்க்க முடியாத ஒரு தரப்பாகவும் அந்தக் கட்சி இருக்கிறது. ஆனால் அந்தக் கட்சியில் மக்களால் ஏற்று கொள்ளாத தரப்புகள் மறைமுகமாக சிலவற்றைச் செய்கின்றனர். அவ்வாறு மக்களால் தெரிவு செய்யப்படாத தரப்புகள் அந்த கட்சியின் பெயரை பாவித்து தாம் நினைத்ததை செய்து வருகின்றனர்.

அதனை கட்சியின் நிலைப்பாடாக அறிவிக்கின்றனர். ஆகவே இருக்கின்ற எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தனியே கடிதமொன்றை ஐ.நாவிற்கு அனுப்பலாம்தானே?

அவ்வாறு எம்பிக்களாக செய்ய வேண்டியதை செய்யாமல் விடுட்விட்டு பின்னர் கட்சியின் நிலைப்பாடு என சொல்ல கூடாது.

சர்வதேச குற்றவியல் விசாரணையை வலியுறுத்தி முன்நகருகின்ற இந்நேரத்தில் கட்சி முடிவுதான், அதற்கும் எமக்கும் சம்பந்தமில்லை என கூறுவதில் அர்த்தம் இல்லை. ஆக சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு இருக்க கூடாது என்பதை கூறி வைக்க விரும்புகிறேன். – என்றார்.









# வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியின் 135ஆவது ஆண்டு நடைபவனி நேற்று சிறப்பாக

(கி.வசந்தன்)

வவுனியாவின் முன்னணி தேசிய பாடசாலையான இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியின் 135 ஆவது ஆண்டினை கொண்டாடும் முகமாக நேற்று நடைபெற்ற நடைபவனியால் வவுனியா நகரமே அதிர்ந்தது.

வவுனியாவில் கல்வி மற்றும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் பல்வேறு சாதனைகளைப் படைத்து வரும் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி 135 ஆவது ஆண்டைக் கொண்டாடி வருகின்றது.

இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் இக் கல்லூரியின் இந்நிகழ்வுக்கு வலுச் சேர்க்கும் முகமாக கல்லூரியின் மாணவிகள், பழைய மாணவிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மேள தாள வாத்தியங்கள் மற்றும் இசை மழையுடன் நடைவனி ஒன்றை மேற்கொண்டனர்.

பாடசாலை முன்பாக ஆரம்பித்த நடைபவனி, இரண்டாம் குறுக்குத் தெரு ஊடாக கண்டி வீதியை அடைந்து, அங்கிருந்து மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியை அடைந்து, பஸார் வீதி ஊடாகச் சென்று, ஹொரவப்பொத்தானை வீதி ஊடாக பாடசாலை முன்றிலைச் சென்றடைந்தது.

இந்த நடைபவனி காரணமாக வவுனியா நகரமே வியப்பில் அதிர்ந்திருந்ததுடன், பலரும் அதனை வேடிக்கை பார்த்து மகிழ்தனர். பல பெற்றோர்கள், பழைய மாணவிகளுக்கு பள்ளிக்கால நினைவுகளை மீள மீட்டுத் தந்த நிகழ்வாக இந்த நடைபவனி அமைந்திருந்தது.













# ஜிந்துப்பிட்டி ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் பால்குடம், பன்னீர்க் காவடியுடன் ஆடிவேல் திருவிழா

ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் பால்குடம், பன்னீர்க் காவடியுடன் ஆடிவேல், விழா சனிக் கிழமை காலை வெகுசிறப்பாக சிவஸ்ரீ ரகுராமக்குருக்கள் தலைமையில் நடைபெற்றன.

ஆலயத்தில் இருந்து பெரும் திரளான பக்தர்கள் காவடி, பால்குடம் எடுத்து ஊர்வலமாக வீதி வலம் செல்வதை யும் மூலஸ்தான மூலவருக்கு பக்தர்கள் சுமந்து வந்த பாலி னால் அபிஷேகம் நடைபெறுவதையும் படங்களில் காண லாம்.










# திருமலை வில்லூன்றி கொடியேற்றம்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்றுக் காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.





















# வவுனியாவில் பிள்ளையார் ஆலய சுற்றுச் சுவரில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கைவரிசை

**(கி.வசந்தன்)**

வவுனியா நெளுக்குளம் சந்தியில் வீதியோரத்தில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தின் வளாக சுற்றுச் சுவரை இடிக்குமாறு தெரிவித்து வீதி அபிவிருத்தி அதிகார சபையினரினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளமையுடன் ஆலய வளாகமும் இடித்தழிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையங்களின் பெயர்ப்பலகைகள், பஸ் தரிப்பிடம், ஓட்டோ தரிப்பிடம் ஆகியன அமைந்துள்ள பகுதியிலேயே இந்தப் பிள்ளையார் ஆலய வளாகம் காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மேற்படி பிள்ளையார் ஆலய வளாகச் சுற்றுச்சுவரை மாத்திரம் அகற்றுமாறு தெரிவித்து நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொண்டுள்ளனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் முறைப்பாட்டிற்கமைய விசாரணைகளை முன்னெடுத்த நெளுக்குளம் பொலிஸார், அந்த ஆலய வளாகச் சுற்றுச்சுவரை அகற்றுமாறும் இல்லாவிடில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முறைப்பாட்டிற்கமைய நீதிமன்றில் வழக்கு தாக்கல் மேற்கொள்ளப்படும் எனவுன் ஆலய நிர்வாகம் மற்றும் அப்பகுதி மக்களுக்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனால் பொலிஸார் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அச்சத்தினால் ஆலய நிர்வாகத்தினால் ஆலய வளாக சுற்றுச்சுவர் இடித்தழிக்கப்பட்டது.

நகரில் பல வர்த்தக நிலையங்கள் மற்றும் பல மதஸ்தலங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் எல்லையினுள் பாரிய கட்டடங்களை அமைத்துள்ளமையுடன், வாடிகாலையும் ஆக்கிரமித்துள்ளன. இருப்பினும் அவற்றை அகற்றுவதில் அக்கறை செலுத்தாத வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இந்தப் பிள்ளையார் ஆலய வளாகத்தை மாத்திரம் அகற்றுவது இந்து சமய மக்களின் மத்தியில் பாரிய அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.

# 5 கைக்குண்டுகள் மற்றும் ஆயுதப் பாகங்கள் திருக்கோயில் பகுதியில் பொலிஸாரால் மீட்பு







**(தில்சாத் பர்வீஸ்)**

அம்பாறை மாவட்டம், திருக்கோயில் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வம்மியடி பகுதியில் இருந்து நேற்று சனிக்கிழமை 5 கைக்குண்டுகள் மற்றும் ஆயுதங்களின் உதிரிப் பாகங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்ட அரச புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, வம்மியடி பகுதியின் ஊடாக செல்லும் பரந்த ஆற்றுப் பகுதியில் காணப்படும்மரம்ஒன்றின்அடிப்பகுதியில்மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 5 கைக்குண்டுகள் மற்றும் ஆயுதங்களின் உதிரிப் பாகங்கள் சிலவற்றை பொலிஸ் மீட்டுள்ளனர்.

இந்த இடத்தில் முன்னர் விடுதலைப் புலிகளின் முகாம் இருந்ததாகக் கூறப்படுகின்றது. இதனால் அப்பகுதியில் மேலும் ஆயுதங்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் திருக்கோயில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# ஐ.நா. ஆணையருக்கான கடிதமும் அணுகுமுறைச் சிக்கல்களும்!



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னெடுப்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் இணைந்து கடந்த வாரம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளருக்கு கடிதமொன்றை எழுதின. இலங்கைத் தமிழரசுக் கட்சி, அந்தக் கடிதத்தின் பங்காளியாக தன்னை இணைத்துக் கொள்ளவில்லை. மாறாக, கடிதத்தில் கையெழுத்திடுமாறு முன்னணியின் தலைவர்கள் தொடர்ச்சியாக அழைத்த போதும், தமிழரசுக் கட்சி அதனை நிராகரித்துவிட்டது. இந்தக் கடிதத்துக்கான பதிலை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், 24 மணித்தியாலங்களுக்குள் அனுப்பியும் விட்டார். கடிதத்தின் உள்ளடக்கம், அது வரையப்பட்ட முறைமை தொடர்பில் வாதப் பிரதிவாதங்கள் உண்டு. சர்வதேச ரீதியில், குறிப்பாக ஐ.நா. அமைப்புக்கள் மற்றும் இராஜதந்திர வட்டாரங்களை நோக்கி, தமிழ்த் தேசிய நிலைப்பாடுகளைப் பிரதிபலித்து எழுதப்படும் கடிதங்கள் தொடர்பில், எல்லாக் காலங்களிலும் ஆதரவு – எதிர்க்கருத்துக்கள் வெளி வருவதுண்டு. ஆரோக்கியமான அரசியலுக்கு, கருத்து மோதல்கள் அடிப்படையானவை. அதனால், அவ்வாறான சூழல் தொடர்ந்தும் நிலவ வேண்டும். ஆனால், முன்னணியின் முன்னெடுப்பில், ஐ.நா. ஆணையாளருக்கான கடிதத்தில் தமிழரசுக் கட்சி தன்னை பங்காளியாக இணைத்துக் கொள்ளாமை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானது. ஏனெனில், தமிழ்த் தேசிய அரசியலில் முதன்மைக் கட்சியான தமிழரசுக் கட்சி, கிட்டத்தட்ட தமிழ்த் தேசிய அரசியலின் ஏனைய தரப்புக்கள் அனைத்தும் இணைந்து எழுதியிருக்கின்ற கடிதத்தில் தன்னை இணைத்துக் கொள்ளவில்லை என்பது துருத்திக் கொண்டிருக்கும் விடயமாகும்.

தமிழ்த் தேசிய அரசியலில் பொது நிலைப்பாடுகள், தேவைகள், கோரிக்கைகள், போராட்டங்கள் சார்ந்து கட்சிகளையும், சிவில் அமைப்புக்களையும் ஓரணியில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பது தொடர் எதிர்பார்ப்பு. ஆனால், அவ்வாறான ஒன்று பெரியளவில் நிகழ்வதில்லை. இறுதியாக, அது புலிகளின் ஆயுதப் போராட்ட வெற்றிக் காலத்தில் நிகழ்ந்தது. அதுதான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரசவித்தது. அதுவரை, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ இயக்கங்களை எதிரணியில் வைத்து அணுகி வந்த புலிகள், அவர்கள் எல்லோரையும் தங்களின் தலைமையின் கீழ் ஓரணியில் இணைப்பதற்கு தீர்மானித்தார்கள். அந்தத் தீர்மானம், தங்களை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்கிற அடிப்படையை ஏற்பதன் பிரகாரம் நிகழ வேண்டும் என்பதில், கவனமாக இருந்தார்கள். அதுதான், நிகழ்ந்தது. ஏனெனில், அந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்த ஈ.பி.டி.பியும்,புளொட்டும் அப்போது கூட்டமைப்பில் இணையவில்லை. அவர்களுடன் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்ட போதும், அவர்கள் புலிகளை ஏக தலைமையென்று ஏற்பதற்கு மறுத்தார்கள். அதற்கு அவர்களுக்கான காரணங்களும் உண்டு. அதனைவிட, அவர்கள் அப்போது இலங்கை அரசோடு நெருக்கமாக இயங்கினார்கள் என்பது வெளிப்படையானது. புலிகள், ஆயுதமுனை வெற்றி முகத்தில் நின்று ஒருங்கிணைத்த போதும் கூட, இன்னமும் தமிழ் அரசியலில் நீடிக்கும் ஈ.பி.டி.பியையும் புளொட்டையும் தங்களின் கீழான அணியில் இணைக்க முடியவில்லை. ஆனாலும், கூட்டமைப்பைத்தான் இன்றுவரை, தமிழ்த் தேசிய அரசியல் – போராட்டக் களம் கண்ட பெரிய ஒருங்கிணைப்பாக கொள்ள வேண்டும். தந்தை செல்வா – ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் இணக்கமான காலத்திலும்கூட ஒரே ஆணைக்கு இயங்கும் தரப்பாக, எந்த இணைவுகளும் பெரியளவில் இருக்கவில்லை. ஆனால், கூட்டமைப்பாகப் புலிகள் அமைத்தது, அவர்களின் குரலாகவே நாடாளுமன்றத்திலும் வெளியிலும் இறுதி மோதல்களின் இறுதிக் கட்டங்கள் வரையில் நீடித்தது. அதாவது, புலிகளின் பிடி இருக்கும் வரையில், கூட்டமைப்பு என்பது புலிகளின் குரல்தான்.

முள்ளிவாய்க்கால் முடிவுகளைச் சந்தித்து 16 ஆண்டுகளாகிவிட்டது. தமிழ்த் தேசிய அரசியலின் இயங்கு நிலையும் மாறிவிட்டது. ஆயுதப் போராட்ட வடிவம் இல்லை. அஹிம்சைப் போராட்டத்தின் சில கூறுகளை உள்வாங்கிக் கொண்ட தேர்தல் அரசியலுக்குள் தமிழ்த் தேசியப் போராட்டக் களம் சுருங்கிவிட்டது. அப்படியான கட்டத்தில், தமிழ்த் தேசிய அரசியலின் அனைத்து விடயங்களையும் தேர்தல் அரசியலுக்கான இலாப – நட்டக் கணக்கில் அணுகத் தொடங்கிவிட்டார்கள். இந்த நிலைக்கு, கட்சிகள் மாத்திரமல்ல தங்களை புத்திஜீவிகள், அரசியல் ஆய்வாளர்கள், சிவில் பிரதிநிதிகள் என்று முன்னிறுத்தும் தரப்பினரும் காரணமாவர். ஏனெனில், வெளித் தரப்புக்களைக் காட்டிலும், தமிழ்த் தேசிய அரசியலுக்குள் அதிக பிளவுகள் – குழப்பங்கள் இந்தத் தரப்புக்களினாலேயே நிகழ்ந்திருக்கின்றன. அவை, தன்முனைப்பு, தனி மனித வெறுப்பு அரசியலினால் அதிகம் நிகழ்ந்தது. தேர்தல் வெற்றி தோல்வியை சிந்திக்கும் அரசியல் அரங்கில்தான், தனி மனித வெறுப்பு, தன்முனைப்பு, அவதூறுகள் கோலோச்சும்.

தொடர்ச்சி▼



# ஐ.நா. ஆணையருக்கான கடிதமும் அணுகுமுறைச் சிக்கல்களும்!

தொடர்ச்சி▲

ஏனெனில், அந்த அரசியலுக்கு ஆட்சி, அதிகாரத்தான் இலக்கு. ஆனால், விடுதலைக்கான போராட்டத்தை தலையாய கடமையாக ஏற்ற அரசியலை முன்னெடுக்கும் சமூகத்துக்குள், சராசரி தேர்தல் அரசியல் எண்ணங்கள் கருக்கொண்டால், அது சீரழிவு அரசியலாக மாறி நிற்கும். அது, எந்தவித தார்மீக நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தாது. கடந்த 16 ஆண்டுகளாக தாயக அரசியலும், அது சார்ந்த புலம்பெயர் தேசத்து இயக்கமும் அப்படித்தான் இருக்கின்றது.

ஐ.நா. ஆணையாளருக்கு கடிதம் எழுதுவது தொடர்பிலான கூட்டத்திற்கு முன்னணியே அழைப்பு விடுத்தது. அதன் தலைவர்கள் தொலைபேசிகளிலும், குறுஞ்செய்திகளிலும் அழைப்பு விடுத்தார்கள். அப்படி அழைக்கப்பட்ட தரப்பினரே, சந்திப்பில் கலந்து கொண்டார்கள். ஆனாலும், தான் சந்திப்புக்கு அழைக்கப்படாமை தொடர்பில் சிரேஷ்ட ஊடகவியாளர் ஒருவர் விசனப்பட்டார். “கடந்த காலங்களில், இவ்வாறானசந்திப்புக்கள்,கலந்துரையாடல்களுக்குஅழைப்பு விடுத்திருக்கிறார்கள். நானும் கலந்து கொண்டு என்னுடைய நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியிருக்கிறேன். ஆனால், முன்னணியின் நடவடிக்கைகள் தொடர்பில் சில விமர்சனங்களை அண்மைய நாள்களில் வைத்துவிட்டேன். அது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. சந்திப்புக்கு என்னை அழைக்கவில்லை. மாறாக, நான் அழைக்கப்படாமைக்கு, நான் றோக்காரன் என்று பதிலளித்திருக்கிறார்கள்.” என்பதாக அவர் ஆதங்கப்பட்டார். இது, தமிழ்த் தேசிய அரசியலின் இயங்கும் தரப்பினரின் ஒரே நிலைப்பாடுதான். தங்களை யாராவது சற்று விமர்சித்துவிட்டால், அவர்களைப் புறந்தள்ளிவிட்டுத்தான் அடுத்த வேலையைப் பார்க்கிறார்கள். இவ்வாறான நிலை, இலகுவான பிளவுகளை ஏற்படுத்தி விடுகின்றது. கலந்துரையாடல் என்பது அடிப்படையில் கருத்துக்களுக்கானதிறந்தகளமாகஇருக்கவேண்டும்.குறைந்தபட்சம், தமிழ்த் தேசிய அரசியலை உள்வாங்கிக் கொண்ட அனைத்துத் தரப்பினரையாவது இணைத்து நிலைபெறுவதாக இருக்க வேண்டும். மாறாக, அரசியல் ரீதியான விமர்சனங்களை தனிப்பட்ட கோபதாபங்களாக உள்வாங்கிப் பிரதிபலிக்கும் போது, அதுதான் ஒருங்கிணைவுக்கான முதற் தடையாக இருக்கின்றது.

ஐ.நா. ஆணையாளருக்கான கடிதம் எழுதுவது தொடர்பிலான விடயத்தை முன்னெடுத்த முன்னணி, தமிழரசுக் கட்சியை அதன் பங்காளியாக இணைந்து கொள்ள வேண்டும் என்று கூறி அழைத்தது. ஆனால், அந்த அழைப்பு விடுக்கப்படுவதற்கு முன்னரும் பின்னரும் கூட தமிழரசுக் கட்சியாக, அது கடிதத்தில் பங்கெடுத்துவிடக் கூடாது என்ற தோரணையைப் பிரதிபலித்தது. சந்திப்புக்கு முதல்நாள், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அவரது கட்சியினரும் நடத்திய ஊடகவியலாளர்கள், யூரிப்பர்கள் உடனான சந்திப்பின் போதும், தமிழரசுக் கட்சியே பிரதான பேசுபொருளானது. அதிலும், அந்தக் கட்சி தமிழின விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது என்று குற்றஞ்சாட்டினார்கள். தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய அரசியலின் முதன்மைக் கட்சி, தாயகம் முழுவதிலும் அங்கீகாரம்பெற்ற கட்சி என்கிற அடிப்படையை உள்வாங்காது, அந்தக் கட்சியை நோக்கி “துரோகிகள்” அணுகுமுறை வைக்கப்படும் போது, அது அந்தக் கட்சியினரை இலகுவாக புறக்கணிக்க வைக்கும். கடிதம் அனுப்பப்படுவதற்கு முன்னரும்கூட தமிழரசுக் கட்சியின் கையெழுத்தைக் கோருவது தொடர்பில் கடிதத்தை எழுதிய தரப்பினருக்கும் சுமந்திரனுக்கும் இடையில் பேச்சு நடைபெற்றது. அப்போது, தாங்கள் எழுதியுள்ள கடித உள்ளடக்கத்தில் எந்தவித மாற்றத்தையும் செய்ய முடியாது என்ற நிலைப்பாட்டோடுதான், பேசியிருக்கிறார்கள். ஒரு விடயம் தொடர்பில் பேசுவதற்குச் செல்வதற்கான மனநிலை என்பது, மற்றவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கும் அளவுக்கு இருக்க வேண்டும். அதனை, நிராகரித்துவிட்டு, பேச்சுக்களை நடத்த முடியாது. அப்படி நடத்தப்படுவது பேச்சுமல்ல. அது, மிரட்டல் மட்டுமே.

தமிழரசுக் கட்சி தன்னை முதன்மைக் கட்சி என்ற இடத்திலிருந்து யாருக்காகவும் கீழிறக்கிக் கொள்ள விரும்பாது. ஏனெனில், அதுவும் தேர்தல் வெற்றி தோல்வி குறித்துத்தான் சிந்திக்கிறது. அதுவும், கடந்த பொதுத் தேர்தலில் பின்னடைவில பெற்ற பாடங்களை கணிசமாக உள்வாங்கிக் கொண்டிருக்கின்றது. அதனால்தான், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மீண்டெழ முடிந்திருக்கின்றது. அதுபோல, ஏனைய தரப்பினரின் இழுப்புக்களுக்கு எல்லாம் இழுபட்டுத் திரிந்தால், கடந்த கால பின்னடைவுகளை மீண்டும் சந்திக்க வேண்டி வரும் என்று நினைக்கின்றது. அதனால்தான், கட்சியின் நிலைப்பாட்டிற்கு அப்பாற்சென்று, எந்தவொரு நபரினாலும் இம்முறை கடிதத்தில் கையெழுத்திட முடியவில்லை. ஐ.நா. ஆணையாளருக்கான சம்பந்தப்பட்ட கடிதத்தில் கையெழுத்திடுவதில்லை என்ற முடிவை, தமிழரசுக்

தொடர்ச்சி▼



# ஐ.நா. ஆணையருக்கான கடிதமும் அணுகுமுறைச் சிக்கல்களும்!

தொடர்ச்சி▲

கட்சி தன்னுடைய அரசியல் குழுவையும் – நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்து நடத்திய கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு அறிவித்தது. அந்த அறிவிப்பின் பின்னரும்கூட, தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தனிப்பட்ட ரீதியில் அணுகி, கடிதத்தில் கையெழுத்திடுமாறு முன்னணியினரும், கடிதத்தை வரைந்த தரப்பினரும் கோரியிருக்கிறார்கள். ஆனால், அவ்வாறு கையெழுத்திட்டால், அது தங்களுக்கு எதிராக கட்சி நடவடிக்கை எடுப்பதற்கான ஏதுகைகளை ஏற்படுத்தும் என்பதால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மறுத்துவிட்டார்கள். ஏனெனில், கடந்த காலங்களில் இவ்வாறான குழப்பங்களில் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களை, தமிழரசுக் கட்சி ஒதுக்கியிருக்கின்றது. அல்லது, அவர்களின் தலைகளுக்கு மேலாக கத்தி தொங்கும் அளவுக்கான நிலை இருக்கின்றது. குறிப்பாக, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் நிலைப்பாட்டை மீறி, தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்து இயங்கியவர்கள் கட்சிக்குள் நெருக்கடிகளைச் சந்திக்கிறார்கள். அது, எப்போது வேண்டுமானாலும் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிரான ஆயுதமாகத் திரும்பும் என்றும் தெரியும். அப்படியான நிலையில், கட்சியின் நிலைப்பாட்டை மீறி, இவ்வாறான விடயங்களில் யாரும் தனிப்பட்ட ரீதியில் கையெழுத்திடுவதற்கு வாய்ப்பில்லை.

அடிப்படையில், கட்சியொன்று தன்னுடைய நிலைப்பாட்டை அறிவித்த பின்னர், அந்தக் கட்சியின் உறுப்பினர்களை கையெழுத்திடக் கோருவது அரசியல் அறம் அல்ல. ஏனெனில், அது சம்பந்தப்பட்ட கட்சியைப் பிரித்தாளும் தந்திரமாகும். கடந்த காலங்களில், கூட்டமைப்பையும், தமிழரசுக் கட்சியையும் இவ்வாறான தந்திரத்தோடு அணுகிய தரப்புக்கள் ஏராளம். குறிப்பாக, சிவில் சமூக அமைப்புக்களின் பெயரில் ஆர்வலர்களாக தங்களைக் காட்டி இயங்கிய சிலர், மிகமோசமான பிரித்தாளும் சூத்திரங்களை பிரயோகித்துப் பார்த்திருக்கிறார்கள். அப்படியான சூத்திரங்களை ஒருபோதும் அனுமதிப்பதில்லை என்ற நிலைப்பாட்டை தமிழரசுக் கட்சி எடுப்பதில் தவறில்லை. ஏனெனில், பின்னடைவுகளை கடந்த காலத்தில் சந்தித்துவிட்டு மீண்டெழும்போது, கட்சிக் கட்டுக்கோப்பைப் பேணுவதுதான், அதன் நிலைபெறுகைக்கு உதவும். தமிழரசுக் கட்சி தன்னுடைய முடிவை அறிவித்த பின்னர், அதனிடம் மீண்டும் பேசுவது தப்பில்லை. மீண்டும் மீண்டும் யாரும் யாருடனும் பேசலாம். ஆனால், ஒரு கட்டமைப்பை சிதைக்கும் நோக்கத்தோடு அணுகுவது அபத்தமானது. அது, இவ்வாறான நிலைப்பாட்டை தங்களுக்கு எதிராக பிரயோகித்தவர்கள் என்று தமிழரசுக் கட்சி நினைக்கும் தரப்பினரை, காரணங்கள் ஏதுமின்றி நிராகரிக்க வைக்கும். வழக்கமாக தேர்தல் வெற்றிக்காக கட்சிகள் மோதிக் கொள்ளலாம். ஆனால், ஈழத் தமிழினம் போன்ற சவால்களைச் சந்தித்து நிற்கும் சமூகத்துக்குள் இருக்கும் சிவில் சமூக அமைப்புக்களும் – அதனைப் பிரதிநித்துவப்படுத்துவர்களும் குறைந்தபட்ச ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அது, பொது விடயங்கள், பிரச்சினைகளை முன்வைத்து கட்சிகளை சிதைப்பதையோ, பிரித்தாளுவதையோ நிறுத்திக் கொள்ள வேண்டும். கடந்த காலத்தில், இவர்களின் நடவடிக்கைகள், தமிழ் சிவில் சமூக கட்டமைப்பு மீதான நம்பிக்கையைத் தகர்த்து விட்டிருக்கின்றது. கடந்த கால அனுபவங்களில் இருந்து எல்லோரும் கற்றுக் கொள்வதற்கான விடயங்கள் தமிழ்த் தேசிய அரசியல் சூழலில் உண்டு. அதனை உள்வாங்கிப் பிரதிபலித்தால், கட்சி அரசியலுக்கு சமாந்தரமாக சிவில் சமூகக் கட்டமைப்புக்கள் பலம் பெறும். அப்போது, தமிழ்த் தேசிய பொது விடயங்கள், பிரச்சினைகள் தொடர்பில் இன்னும் ஆரோக்கியமான அணுகுமுறை நிகழும். அது, எமக்கான அடைவுகளை அர்த்தப்படுத்தும் காட்சிகளைப் பிரதிபலிக்கும்.

இறுதியாக, ஐ.நா. ஆணையாளருக்கான கடிதத்தில், தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலுள்ள பல தரப்பினரின் பெயர்களும் – அடையாளங்களும் சம்பந்தப்பட்ட தரப்பினரின் அனுமதியின்றி கையாளப்பட்டிருக்கின்றன. எண்ணிக்கைக் கணக்கைக் காட்டுவதற்காக அனுமதியின்றி பெயர் விவரங்களை, இராஜதந்திர மட்டத்தில் வரையப்படும் கடிதத்தில் எடுத்துக் கையாள்வது தவறானது. தங்களின் பெயர், விவரங்கள் உள்ளடக்கப்பட்டமை தொடர்பில் யாழ். ஊடக அமையம் அதனை, வெளிப்படையாகக் கண்டித்தும் இருக்கின்றது. இப்படி, பல அமைப்புக்கள், மத குருமாரின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இந்த விவரங்களை விரிவாக எழுதினால், அதுவே பெரிய பத்தியாக மாறிவிடும். அவ்வளவு, முன்னுக்குப் பின் முரணான காரியங்கள் அரங்கேறியிருக்கின்றன. எதிர்காலத்திலாவது, இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. அதுதான், நம்பிக்கையைக் கட்டியெழுப்ப உதவும்.




# தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி கோரி தமிழர் தாயகத்தில் 'நீதியின் ஓலம்' போராட்டம்

## அதன் மூலம் கையொப்பம் சேகரிக்கவும் முயற்சி

தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி கோரி தமிழர் தாயகம் எங்கும் "நீதியின் ஓலம்" எனும் போராட்டம் முன்னெடுக்கப்படவிருக்கின்றது. அதன் மூலம் கையொப்பம் சேகரிக்கவும் முயற்சி நடைபெறவுள்ளது.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே தாயகச் செயலணி அமைப்பினர் இந்தத் தகவலை வெளியிட்டனர்.

அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழர்கள் மீது தொடர்ந்து நடைபெறும் இனவழிப்பின் சாட்சியாக, யாழ்ப்பாணம் செம்மணியில் அகழ்ந்தறியப்பட்ட மனிதப் புதைகுழிகளில் இருந்து 100-க்கும் மேற்பட்ட எலும்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழி என்பது, ஈழத் தமிழர்கள் மீது இலங்கை அரச பயங்கரவாதத்தால் நடத்தப்பட்ட மனிதப் பேரவலத்தின் சிறு சாட்சியம் மட்டுமே. குறிப்பாக, 1996 ஆம் ஆண்டில் இலங்கை அரசுப் படையினரால் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட, 16 வயதுடைய பாடசாலை மாணவியின் வழக்கின் மூலமாகவே இவ்விடயம் வெளிச்சத்திற்கு வந்தது.

இப்படுகொலைக்கு முன்னதாக 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இடம்பெயர்வு காலத்திலும் அதன் பின்னரும் சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் உட்பட பல நூற்றுக்கணக்கானோர் மிகக் கொடூரமாக படுகொலை செய்து புதைக்கப்பட்டனர் என்பதனை நிரூபிக்கும் வகையில், கிருஷாந்தி படுகொலை வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்ட இலங்கை அரசுப் படைச் சிப்பாயின் பகிரங்க வாக்குமூலத்தின் அடிப்படையில், 1999 ஆம் ஆண்டில் 15 எலும்புத் தொகுதிகள் மீட்கப்பட்டன.

ஆயினும், பின்னர் ஆட்சிக்கு வந்த இலங்கை அரசியல் இயந்திரங்கள் அவற்றை முழுமையாக விசாரணை செய்யாமல், மூடி மறைத்து வந்தன. அண்மையில், அப்பகுதியில் கட்டுமான வேலைக்காக நடைபெற்ற அகழ்வுப் பணியின் போது மனித எலும்புக்கூடுகள் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால், இவ்விடயத்தை மூடி மறைக்கும் முயற்சிகள் அரசுத் தரப்பால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்களும் சர்வதேச சமூகமும் மேற்கொண்ட தொடர்ச்சியான அழுத்தங்களின் மூலமே இதுவரை பல எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இதைப் பற்றிய கவனவீர்ப்பு நிகழ்வு, அணையாவிளக்கு போராட்டமாக தாயக மக்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அதன் தொடர்ச்சியாக, வரும் 23.08.2025 சனிக்கிழமை தொடங்கி தொடர்ந்து ஐந்து நாள்கள் தமிழர் தாயகமெங்கும் "நீதியின் ஓலம்" எனும் போராட்டத்தின் வாயிலாக, தமிழினப்படுகொலைக்கு சர்வதேச நீதி கோரி கையொப்பங்களும் சேகரிக்கப்படவுள்ளன.

இந்த கையொப்பப் போராட்டத்தின் கோரிக்கைகள்:

1.இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட செம்மணி உட்பட்ட அனைத்து மனிதப் புதைகுழிகளுக்கும் முழுமையான சர்வதேச நீதிவிசாரணை நடைபெற வேண்டும்.

2. எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கை மீது வலுவான தீர்மானம் கொண்டு வந்து, அனைத்து நாடுகளும் தெளிவான நிலைப்பாடு எடுக்க வேண்டும்.

3. தமிழர்கள் மீது இனப்படுகொலை செய்தபடைஅதிகாரிகளுக்குஅமெரிக்கா, பிரித்தானியா, கனடா போல அனைத்து நாடுகளும் பயணத் தடையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

4. தமிழர் இனவழிப்பில் பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சியங்களையும் பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை முழுமையான பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும்.

5.இலங்கை அரசு கையகப்படுத்தியுள்ள தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடங்களை விடுவிப்பதோடு, தமிழர் தாயகத்தை பல்வேறு வகையில் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை நிறுத்த சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

6."பயங்கரவாதத் தடைகள்" என்ற பெயரில் இன்றும் தொடரும் தமிழின அடக்குமுறைகளை நிறுத்தவும், நீண்டகாலமாகச் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யவும் சர்வதேச அழுத்தம் தேவை.

7.கடந்த 76 ஆண்டுகளாகத் தொடரும் தமிழர் இனவழிப்பை நிறுத்தி, ஓர் சர்வதேச நீதிப்பொறிமுறை மூலம் தமிழர்களின் வாழ்வுரிமையை உறுதிசெய்ய அனைத்து நாடுகளும் ஆதரவு வழங்க வேண்டும்.

8.வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகள் தமிழர்களின் பூர்வீகத் தாயகம் என்பதையும், தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை உடையவர்கள் என்பதையும் ஏற்றுக்கொண்டு, வட்டுக்கோட்டைத் தீர்மானம் மற்றும் திம்பு பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் இறையாண்மை உள்ள தேச அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.

9. தமிழ்மக்களுக்கு வழங்கப்படும் தேச அதிகாரங்கள் எந்தக் காலத்திலும் மீளப்பெற முடியாத வகையில் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதை சர்வதேசமும் ஐ.நா.வும் உறுதிப்படுத்த வேண்டும்.

மேற்கண்ட விடயங்களை வலியுறுத்தி, "நீதியின் ஓலம்" என்ற கையொப்பப் போராட்டம் 23.08.2025 சனிக்கிழமை காலை 10 மணி முதல் செம்மணியில் ஆரம்பித்து தமிழர் தாயகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும்.

இந்தப் போராட்டம் வெற்றியடைய, அனைத்து ஊடகங்களும், அமைப்புகளும், குறிப்பாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்கள், மாணவர் அமைப்புகள், சிவில் அமைப்புகள், மத அமைப்புகள், வர்த்தகர் சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள், போக்குவரத்து கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள், ஊர்ச் சங்கங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள், புத்திஜீவிகள் மற்றும் பொதுமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவரது பேராதரவும் ஒத்துழைப்பும் அவசியம் - என்றனர்.


# மன்னார்த் தீவின் எதிர்காலம்...?



வி.எஸ்.சிவகரன்


அதிகார வர்க்கம், ஜனநாயகம் என்னும் போர்வையில் தமது திட்டத்தை விருப்பு, வெறுப்பு கடந்து நடைமுறைப் படுத்த முனைவதே அதிகார வர்க்கத் தின் அடி நாதமாக அமைந்திருக்கிறது.

இதற்குள் அரசின் நலன்களும், ஆளுங்கட்சியின் எதிர்பார்ப்பும், பிராந்திய நலனின் நோக்கும், முத லீட்டாளர்களின் விருப்பமும் முதன்மைப்படுத்தப்படுமே தவிர, சாமானிய மக்களின் கருத்துக்களையோ அவர்களின் உணர்வுகளையோ இந்த ஜனநாயக காவலர்கள் ஒருபோதும் ஏற்புடமையாக்கியது இல்லை.




அதுவும் பெரும்பான்மை பலமுள்ள அரசாங்கம் தான் நினைக்கும் அல்லது விரும்பும் சகல செயல் திட்டங்களையும் ஜனநாயகத்தின் போர்வையிலே திணிப்பதிலும், வலுக்கட்டாயமாக்குவதிலும் முனைப்பு காட்டும். அந்த முனைப்பு மக்கள் நலன் சார்ந்ததாக ஒரு போதும் இருக்க வாய்ப்பில்லை.


ஆனாலும் ஜனநாயகத்தின் பெயரால், மக்களாட்சி தத்துவத்தின் மாண்பை சமூகவியலில் சாமானிய மக்கள் மத்தியில் இவ்விதமான எடுகோள்களை எடுத் தியம்பி, தொழில்நுட்ப அறிவற்ற சமூகக் கட்டமைப் தமது விருப்புக்கு ஏற்றாற் போல் மடை மாற்றம் செய்து, பெரு முதலாளிகளுக்கு கூட்டு வணிகம் செய்வதிலே ஜனநாயக கோட்பாட்டுத் தத்துவம் முன்னிற்கும். அதி காரத்தை தொடர்ந்து தக்க வைப்பதற்கும், பலப்படுத் துவதற்கும் இவ்விதமான ஜனநாயகம் என்கின்ற போர்வைகள் அடித்தளமாக காணப்படுகின்றன. அந்தப் பண்பியல்பு மாற்றமின்மையின் வெளிப் பாடுதான் சமத்துவம், சமூக நீதி ,ஊழல் ஒழிப்பு போன்ற கவர்ச்சிகரமான விளம்பரங்களோடு தேர் தல் களத்துக்கு வந்த அரசாங்கம், இன்று அவை அனைத்தும் நடைமுறை சாத்தியமற்றவை எனப் புரிந்து கொண்டதால் தடுமாற்றத்தில் திளைத்துள்ளது.




மன்னார் மாவட்டமும் இதற்கு விதி விலக்கு அல்ல. கடந்த 2010 ஆம் ஆண்டிலேயே காற்றாலை அமைக்கும் முயற்சியில் அரசு முனைப்பு காட்டத் தொடங்கியது.

அக்காலத்தில் இதனால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் சம்பந்தமாக எந்த புரிதலும் மன்னார் மக்களுக்கு இருக்கவில்லை. ஆனாலும் 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற வடகிழக்கின் முதலாவது ஜனநாயகப் போராட்டத்திலும் காற்றாலைக்கு எதிரான கோஷங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அதற்கு சில வருடங்களின் பின்னர் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவி யுடன் இலங்கை மின்சார சபை 30 காற்றாலைகளை நிறுவுவதற்குரிய வேலைகள் முடிவுற்று மக்கள் மத்தி யிலே அதன் பாதிப்பின் விளைவுகளை உணரத் தொடங்கியதன் வெளிப்பாடு, இன்று வீதிக்கு வருவ தற்குரிய வாய்ப்பையும் தூண்டுதலையும் பட்டறிவு அனுபவத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி என்பது மின்சாரத்தை குறைந்த செலவுடன் ஆகக் குறைந்த பாதிப்புடன் செயல்படுத்தப்படுவது என கூறப்படுகிறது. இது 1830 இல் மின்சார ஜெனரேட்டர் ஆகக் கண்டுபிடிக் கப்பட்டது. 1887 இல் பிரித்தானியாவிலும் 1888 இல் அமெரிக்காவிலும் நவீன காற்றாலை டென்மார்க்கில்




1891லும் உருவாக்கப்பட்டு, அது பின்னர் உலகம் முழுவதும் வியாபித்து, தனிநபர்கள் கூட காற்றா லையை அமைக்கின்ற அளவில் இன்று உலகத்தின் முன்னேற்றங்கள் தோற்றம் பெற்றுள்ளன.

1988 இல் இருந்து இலங்கையில் காற்றாலை அமைப்பது தொடர்பாக பேசி வந்தாலும் 2003 ஆம் ஆண்டு ஹம்பாந்தோட்டையில் முதலாவது காற்றாலை அமைக்கப்பட்டது. பின்னர் புத்தளம் பகுதியிலும் 2014 ஆம் ஆண்டு பல இயக்கச்சொ பகுதியிலும் நிறுவப்பட்டது. 2018 ஆம் ஆண்டு மற வன்புலவு பகுதியில் அமைக்கப்பட்டன. அக்காலத் தில் மன்னாரிலும் 30 காற்றாலை அமைக்கும் பணி கள் நடைபெற்று வந்தன. மன்னார் நறுவிலிக்குளம்

தொடர்ச்சி▼

# மன்னார்த் தீவின் எதிர்காலம்...?

தொடர்ச்சி▲

பகுதியில் தனியார் கம்பனி ஏழு காற்றாலைகளை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டு வந்தன. ஆனாலும் அதன் தாக்கம் குறித்தோ அதனால ஏற்படக்கூடிய மக்களுக்கான பாதிப்பு குறித்தோ எந்தவிதமான முன்யோசனையும் காணப்படவில்லை. செயல் ஒவ்வொன்றையும் முடிவுதான் தீர்மானிக்கிறதே தவிர தொடக்கம் அல்ல என்பது நிகழ்காலப் பட்டறிவு.


மன்னார் மாவட்டத்தின் பூகோள தரை தோற்றத்தின் அமைவிடத்தை பற்றி எவ்வகையிலும் விஞ்ஞான ரீதியான ஆய்வுக்கு அரசாங்கம் முனையவில்லை.

மாறாக முனைந்தாலும் தமக்குத் தேவையான கம்பனிகள் ஊடாக தமது விருப்பை நிறைவேற நிக் கொண்டன. மன்னார் தீவு என்பது நீளம் 26 கிலோமீட்டர். அகலம் ஆகக் குறைந்தது இரண்டு கிலோமீட்டர் காணப்படுகின்றது. இங்கே 12,067 மீனவ குடும்பங்களைச் சேர்ந்த 46,089 நபர்கள் காணப்படுகின்றனர். கடற்கரையின் நீளம் 78 கிலோ மீட்டர் ஆகும். 35 வாடிகளும், 68 கரைவலபாடுகளும் உள்ளன. சாதாரணமாக ஒரு கரை வேலையின் நீளம் 500 மீட்டருக்கு மேற்பட்டதாகும். 326 பிளாஸ் டிக் படகுகளும், 192 மரப் படகுகளும், 353 ட்றோ லர்களும் காணப்படுகின்றன. இத்துடன் பட்டிவலை, விடுவலை சிறுகுறு தொழில் என ஒரு நாள் கடல் தொழில் வருமானம் 22.4 மில்லியன் ரூபா ஆகும். ஒரு மாதத்தில் ரூபா 672 மில்லியனுக்கு மேல் கடற் றொழிலால் வருமானம் கிடைக்கின்றது.

மன்னார் தீவுப் பகுதியில் மாத்திரம் 256. 5 மில்லியன் ரூபா வருமானம் விவசாயத்தால் கிடைக் கின்றது.

அதேபோல் 502 மில்லியன் ரூபா ஓர் ஆண்டுக்கு பனை சார்ந்த பொருள்களிலிருந்து வருமானம் கிடைக்கின்றது. ஆனால் ஏலவே அமைக்கப்பட்ட 30 காற்றாலைகளில் இருந்தும் ரூபா 3,600 மில்லியனே வருடம் ஒன்றுக்குக் கிடைக்கின்றது.

இவ்வாறு இயற்கையாக கிடைக்கக்கூடிய வருமா னத்தை புறந்தள்ளி செயற்கையான வருமானத்தை அரசு விடாப்பிடியாக செயல்படுத்த முனைவது ஏன் என்கின்ற கேள்விக்கு அரசிடம் இதுவரை பதி லில்லை. ஏலவே அமைக்கப்பட்டுள்ள 30 காற்றாலையி னால் ஏற்படுகின்ற பாதிப்புகள் 2020 ஆம் ஆண் டில் உணரப்பட்டதன் பின்னர் மக்கள் பல்வேறு விதமான எதிர்ப்புப் போராட்டங்களைத் தொடர்ந்து



கனிமங்கள் காணப்படும் பிரதேசங்கள்

நடத்தி வருகின்றனர். மூன்று ஜனாதிபதிகளின் கவனத்திற்கும் கொண்டு வந்தனர். பல கூட்டங்கள் மாவட்ட செயலகத்தில் நடந்திருக்கின்றன. பல போராட்டங்களும் நடந்துள்ளன. ஆனால் அரசு இவை அனைத்தையும் கண்டு கொள்ளவில்லை.


ஒரு காற்றாலைக்கு ஏழு ஏக்கர் காணி சுவீ கரிக்கப்படுகிறது.

அக்கணி உரித்து தொடர்பிலும் பல்வேறு வித மான ஐயங்கள் உண்டுழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தையும் சிலர் அணுகியுள்ளனர்ழ் ஆனால் இவை எதற்கும் அரசு செவி சாய்க்கவில்லை.


மன்னார் தீவுப் பகுதியில் காற்றாலை அமைப்ப தனால் அதனுடைய நில கீழ் தட்டுக்கள் பலவீன மான அமைப்பு முறையில் காணப்படுவதனால் அது பாதிக்கப்படும் ஆபத்து உண்டு. நான்காயிரத்தி ஐநூற்று நாற்பது (4,540) மெட்ரிக் தொன் நிறை யுடைய ஒவ்வொரு காற்றாலையும் நிறுவுகின்ற போது மன்னார் தீவின் தாங்குத்திறன் சக்தி ஏலவே பலவீனமான நிலையில் உள்ளதனால் மேலும் பலவீனப்படக்கூடிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். அதனால் இயற்கை அனர்த்தத்தை எதிர்கொள்ளக் கூடிய சவாலையும் ஆற்றலையும் இயல்பாகவே அது இழந்து விடும் என புவியியலாளர்கள் எச்ச ரிக்கை விடுக்கின்றனர்.

நீத. நாடும் அந்த மக்களின் ஜனநாயகக் குரல் தொடர்ந்து நசுக்கப்படுகிறது. அதிகார வர்க்கத்தால் கபளிகரம் செய்யப்படுகிறது. மூன்று மாடிகளுக்கு மேல் கட்டடங்கள் அமைப்பதற்கு அரசு அனுமதி மறுக்கின்ற மன்னார் தீவு பகுதி எப்படி ஒரு லட் சத்து 36 ஆயிரத்து 200 மெட்ரிக் தொன் பாரத்தைச் சுமந்த வண்ணம் உள்ளது? மேலும் காற்றாலை

தொடர்ச்சி▼



# மன்னார்த் தீவின் எதிர்காலம்...?




தொடர்ச்சி▲

களை அமைக்கின்ற போது இதன் பாரத்துடன் அதிகரிக்கும் ஒரு காற்றாலை அமைப்பதற்கு 7,000 பக்கெற் சிமெந்து உபயோகிக்கப்படுகின்றது. 35 தொடக்கம் 45 மீட்டர் ஆழத்தில் அவை அமைக்கப்படுகின்றன.

தொடர்ந்து ஆட்சிக்கு வருகின்ற ஆட்சியாளர்கள் ஏனைய முன்னைய ஆட்சியாளர்களை குற்றம் சாட்டிய வண்ணமே உள்ளனர். தற்போதைய ஜனாதிபதிக்கி





Fig.3 Wind power distribution in Sri Lanka

அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர் அவருடைய நிறைவேற்று குழுவினர் 07ஃ08ஃ 2024 அன்று மன்னாரில் உள்ள சிவில் சமூகத்தினரை சந்தித்து தாம் ஆட்சிக்கு வந்தவுடன் காற்றாலை, கனிமமண் ஆகிய இரண்டு திட்டங்களையும் நிறுத்வுறுத்துவோம் என கூறினார்கள். ஆனால் நடந்தது என்ன? இவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் சீலெக்ஸ் நிறுவனத்திற்கு நான்கு காற்றாலைகளும் (ஒன்று ஐந்து மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடியது) கேலிஸ் நிறுவனத்திற்கு 10 காற்றாலைகளும் அமைப்பதற்குரிய அனுமதி வழங்கப்பட்டது.

இந்த காற்றாலை அமைக்கும் பணியை இலங்கை மின்சார சபையே இரண்டாம் கட்டத்தில் அமைக்க முன்னெடுத்திருந்தது. பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதன் விளைவால் அதிலிருந்து வெளியேறிய போதே 21 அமைக்க வேண்டிய நிலையில் 14 க்குத்தான் ஒப்பந்தம் வழங்கப்பட்டது.


கடந்த ஐந்து ஆண்டுகளாக மன்னாரில் உள்ள சிவில் சமூகம் சகல கூட்டங்களிலும் எதிர்ப்பு தெரிவித்தே வருகின்றது. ஜனாதிபதிக்கும் பகிரங்கமாகவே இது தொடர்பில் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அனைத்தையும் பொருட்படுத்தாத அரசு மேலும் மன்னார்த்தீவுப் பகுதிக்குள் காற்றாலை அமைக்கும் திட்டத்தையே கொண்டிருக்கின்றது.

அது மாத்திரமன்றி மன்னார்த் தீவுக்கு வெளியேயும் பல நூற்றுக்கணக்கான இடங்களில் காற்றாலை அமைக்கின்ற பணிகள் ஈடுபடப் போகிறார்கள். அதில் மன்னார் தீவுக்குள் 14 இடங்களில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பொருள் முதல்வாத உறவுக்கு எதிரான கருத்தியல் கட்டமைப்பை கொண்ட இடது சாரி சிந்தனை உடையவர்கள் என தம்மை தாமே வரித்துக் கொள்ளும் இன்றைய ஆட்சியாளர்கள் பெரு முதலாளி–களோடு உறவைப் பேண விரும்புகிறார்கள்.

மாவட்ட அபிவிருத்திக் குழுவில் பல்வேறு விதமான தீர்மானங்கள் இயற்றியும் அவை பயனற்றுப் போயின. இத்திட்டத்திற்காக பலமுறை அரசாங்க அதிபர் தலைமையிலும் கூட்டங்கள் துறை சார்ந்த வல்லுனர்களோடு இடம் பெற்றன. அவர்கள் எவர்களாலும் மக்களினுடைய புரிதலை உணர்ந்து

தொடர்ச்சி▼




# மன்னார்த் தீவின் எதிர்காலம்...?

**தொடர்ச்சி▲**

கொள்ளக்கூடிய மனநிலை இருக்கவில்லை என்பதே வேடிக்கையான உண்மை.

மன்னார் மக்கள் பொறுமையின் உச்சத்துக்கு வந்துள்ளனர். அதன் விளைவாக காற்றாலை உதிரிப் பாகங்களை வழிமறிக்கும் போராட்டத்தையும் தொடர் கம்பனிகள் உள்ளூரில் பலருக்கு இலஞ்சம் கொடுக்க முற்படுகின்றனர். வெளியே சமூகத்தை தவறான பாதையிலும் வழி நடத்துகின்றனர்.

ஆனால் மன்னார் மக்கள் தொடர்ந்து போராட்டத் தில் ஈடுபட்டே வருகின்றனர். இப்போட்டத்திற்கு ஆயர் இல்லத்தின் கடைக்கண் பார்வயும் இருப்பதனால் போராட்டம் மிகப்பெரிய அளவில் அடுத்த வாரம்




போராட்டத்தையும் ஆரம்பித்துள்ளனர். இதன் பயனாக கடந்த ஏழாம் திகதி நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி யில் மின்சார துறை அமைச்சர், சுற்றுச்சூழல் அமைச்சர், வன்னி, யாழ்ப்பாணம், கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூகப் பிரதி நிதிகள் உடன் கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டன் எந்தவிதமான தீர்மானமும் எடுக்கப் படாமலே முடிவுற்றது. அங்கு வருகை தந்திருந்த மின்சார துறை அமைச்சின் அதிகாரிகள் மிகத் தவறான தகவலை அரசுக்கு ஒப்புவித்தனர். இந்தக் பூதாகரமாக கூடிய வாய்ப்பு உண்டு. ஜனாதிபதியை சந்தித்து இவ்விடயத்தை உரையாடுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்துவதாகவே கொழும்பு கூட்டம் முடிவுற்றது. ஆனால் இதுவரைக்கும் எந்த தகவலும் இல்லை. ஏலவே ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க இவ்விடயத்தை உரையாடுவதையே தவிர்த்திருந் தார். அவ்வாறான நிலைமைதான் அந்ப்ர குமார திஸயக்காவும் எடுக்கப் போகிறாரா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

# யாழ்ப்பாணம் புல்லுக் குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டவர் அடையாளம்



யாழ்ப்பாணம் புல்லுக் குளத்திலி ருந்து சடலமாக மீட்கப்பட்டவர் குரு நகர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எட் வேர்ட் எக்மன் ஜெகதீஷ் (வயது 47) என்ற குடும்பஸ்தர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத் துக்கு அருகாமையில் உள்ள புல்லு குளத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை (08) மாலை ஆண் ஒருவ ரின் சடலம் மீட்கப்பட்டு அடையாளம் காண்பதற்காக யாழ். போதனா வைத் தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு இருந்தது.

நேற்று சனிக்கிழமை (09) அவரு டைய சகோதரர் சடலத்தை அடையாளம் காட்டியுள்ளார். இதனைத் தொடர்ந்து யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணை மேற்கொண் டார்.

இதன்போது, மேற்படி நபர் கனடா நாட்டில் மனைவியும் மகளும் வசிக் கும் நிலையில், அவர் இலங்கை வந் திருந்த சமயம் வலிப்பு நோயால் கார ணமாக புல்லுக்குள கட்டில் இருந்த போது குளத்தில் விழுந்துள்ளார் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. இதனைத் அடுத்து சகோதரரிடம் சடலம் கையளிக்கப்பட்டுள்ளது.



# இலங்கை மசாலாப் பொருள்களுக்கு உலக சந்தையில் அதிக கேள்வி

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் மசாலாப் பொருள்களுக்கு உலக சந்தையில் அதிக கேள்வி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில், 2024 ஆம் ஆண்டு 888.74 மில்லியன் ரூபா பெறுமதியான பொருள்கள் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

இலங்கையிலிருந்து மிளகு, கறுவா என்பன இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

இந்த பயிர்ச்செய்கைகள் மக்களிடமும் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளன.

எனினும், உள்நாட்டில், உரிய விலைக்கு இவற்றை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.



## மருத்துவமனையில் லொஹான் ரத்வத்த

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

அறுவை சிகிச்சைக்காக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் பல மாதங்களாகக் கல்லீரல் தொடர்பான நோய்க்கு சிகிச்சை பெற்று வந்தார்.

இதன்படி, அறுவை சிகிச்சைக்குப் பிறகு அவர் தற்போது கொழும்பில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என தெரிவிக்கப்படுகிறது.

## 7 மாதங்களில் 44 யானைகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளன

இவ்வருடத்தில் கடந்த 7 மாதங்களில் 44 யானைகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளன என வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டு 84 யானைகள் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டுள்ளதாகவும் இது மனித – யானை மோதலையும் சட்டவிரோத வேட்டையின் தாக்கத்தையும் எடுத்துக் காட்டுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் தகவல்களின் அடிப்படையில், 2024 ஆம் ஆண்டில் மொத்தம் 248 யானைகள் பல்வேறு காரணங்களால் மரணித்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

இதில் மின்சாரம் தாக்கி 38 யானைகளும் தொடருந்தில் சிக்கி 13 யானைகளும் மரணித்துள்ளன.

இதனால் காட்டு யானைகளின் எண்ணிக்கையைப் பாதுகாக்க ஒரு சிறப்புச் செயல் திட்டத்தைத் தொடங்க



சுற்றாடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

கவன்திஸ்ஸ போன்ற நன்கு அறியப்பட்ட யானைகளைப் பாதுகாப்பதற்கும், மரணங்களின் ஆபத்தான அதிகரிப்புக்குப் பின்னால் உள்ள காரணங்களைச் சமாளிப்பதற்கும் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

வலுவான நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், நாட்டின் யானைகளின் எண்ணிக்கை ஆபத்தான விகிதத்தில் தொடர்ந்து குறைந்து கொண்டே போகும் என்றும் அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

# கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன் வீழ்ந்து விபத்து

## ஊழியர் உயிரிழப்பு



கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஊழியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்

கொள்கலனை வாகனத்தில் ஏற்ற முற்பட்ட போதே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த நபர் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் பலனளிக்கவில்லை.

தெதிகம பகுதியை சேர்ந்த 36 வயதான நபரே உயிரிழந்தவர் என்பதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# கொழும்பில் போதைபொருள் பாவனை அதிகமாக உள்ள இடங்கள் அடையாளம்

கொழும்பின் போதைபொருள் பாவனை அதிகமுள்ள இடங்கள் அடையாளங்காணப்பட்டுள்ளன.

போதைப்பொருள் பாவனை அதிகமுள்ள இடங்களாக இராஜகிரிய – ஒபேசேகரபுர, பண்டாரநாயக்கபுர, வெல்லம்பிட்டி – கொலன்னாவ, பொரளை – வனாத்த முல்ல, மொரட்டுவை – லுனாவ, முகத்துவராம் – மட்டக்குளி ஆகிய பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்தது.

மேற்படி பகுதியில் போதைப் பொருளுக்கு அடிமையாளனவர்களை அடையாளம் காண விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் பல அரச நிறுவனங்கள் மற்றும் கிளீன் ஸ்ரீலங்கா ஆகியவற்றின் பங்களிப்புடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

கடந்த வருடத்தில் மாத்திரம் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 68,192 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் போதைப் பொருட்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக்களில் 228,450 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மினுவங்கொடை, உன்னாருவ பிரதேசத்தில் ஹெரொயின், ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் நடத்திய சோதனையின் போது சந்தேகநபரிடமிருந்து 1 கிலோ 66 கிராம் ஹெரோயினும், 308 கிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

மினுவங்கொடை பகுதியை சேர்ந்த 37 வயதுடைய சந்தேகநபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

# ஒபரேஷன் சிந்தூரின்போது பாகிஸ்தானின் 6 போர் விமானங்களை சுட்டு வீழ்த்தினோம்

## இந்திய விமானப் படைத்தளபதி தெரிவிப்பு

ஒபரேஷன் சிந்தூர் இராணுவ நடவடிக்கையின்போது பாகிஸ்தானின் ஒரு பெரிய போர் விமானம் மற்றும் 5 போர் விமானங்கள் என 6 போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என விமானப்படைத் தளபதி மார்ஷல் ஏ.பி. சிங் தெரிவித்துள்ளார்.

இந்திய விமானப்படையின் 16 ஆவது ஏர் சீஃப் மார்ஷல் எல்.எம்.கத்ரேவின் நினைவு சொற்பொழிவு நேற்று பெங்களூரில் நடைபெற்றது. இதில் பங்கேற்றுஉரையாற்றியவிமானப்படைத்தளபதி ஏ.பி. சிங், தனது உரையின் போது பாகிஸ்தான் இராணுவ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதன் புகைப்படங்களை பார்வையாளர்களுக்கு திரையில் காண்பித்து விளக்கினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பாகிஸ்தானின் பஹவல்பூரில் இருந்த ஜெய்ஷ் இ முகம்மது பயங்கரவாத இயக்கத்தின் தலைமையகத்தை நாங்கள் தாக்குவதற்கு முன்பும் தாக்கிய பின்பும் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இவை. தற்போது இங்கே எந்த தடையமும் இல்லை. அதேநேரத்தில், அருகிலுள்ள கட்டிடங்கள் அப்படியே உள்ளன. எங்களிடம் செயற்கைக் கோள் படங்கள் மட்டுமல்ல, உள்ளூர் ஊடகங்களிலிருந்தும் படங்கள் கிடைத்தன, அவற்றின் மூலம் நாங்கள் துல்லிய தாக்குதல் நடத்த முடிந்தது.



நமது விமானப்படைத் பாதுகாப்பு அமைப்புகள் ஒரு அற்புதமான வேலையைச் செய்துள்ளன. நாங்கள் சமீபத்தில் வாங்கிய எஸ்-400 அமைப்பு, ஒரு கேம் சேஞ்சராக இருந்து வருகிறது. அந்த அமைப்பின் வீச்சு, அவர்களிடம் உள்ள நீண்ட தூர சறுக்கு குண்டுகள், போர் விமானங்கள் ஆகியவற்றை உள்ளே நுழைய விடாமல் தடுத்து நிறுத்தியது. எஸ்-400 ஐ அவர்களால் ஊடுருவ முடியாததால் அவர்களின் ஆயுதங்களை நமக்கு எதிராக பயன்படுத்த முடியவில்லை." என தெரிவித்தார்.

விமானப்படைத் தளபதி ஏ.பி. சிங் தனது உரையை நிறைவு செய்த பிறகு, பணியில் உள்ள மற்றும் ஓய்வுபெற்ற விமானப்படை வீரர்களுடனும் கலந்துரையாடினார்.

# ஈழத்தமிழர்களுக்கான வீடுகளை திரும்பப்பெறுவதாக எச்சரிக்கை



## சீமான் எதிர்ப்பு

தமிழகத்தின் ஈரோடு பவானிசாகரில் அமைந்துள்ள ஈழத்தமிழர் முகாமில் வசிக்கும் மக்களுக்கு வழங்கப்பட்ட வீடுகள் திரும்பப்பெறப்படும் என கியூ பிரிவு பொலிஸாரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஈழத்தமிழர்களுக்கு நிபந்தனைகளுடன் 420 வீடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன.


இந்தநிலையில் இந்த வீடுகளைப் பெற்ற ஈழத்தமிழர்கள் தங்கள் வீடுகளின் முன்னால் இருந்த, ஆபத்தான திறந்தவெளி கழிவுநீர் தொட்டியை மூடிவிட்டு, முகப்பு கூரை அமைத்தமையை அடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த விடயத்தை வன்மையாகக் கண்டிப்பதாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

வீடுகள் திரும்பப்பெறப்படும் என்ற எச்சரிக்கையால், பவானிசாகர் முகாமில் வசிக்கும் ஈழத்தமிழரான அருள்குமார் என்பவர் உயிரை மாய்த்துக்கொள்ள முயன்றமை மிகுந்த வேதனையை அளிப்பதாக சீமான் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் இனத்திற்கும், நிலத்திற்கும் தொடர்பற்ற வட மாநிலத்தவர்களை நிரந்தரமாய் தமிழகத்தில் தங்க வைத்துள்ளதற்கு விதிக்கப்படாத கட்டுப்பாடுகள், ஈழத்தமிழ் மக்களுக்கு விதிக்கப்படுவதாகவும் சீமான் குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன், கியூ பிரிவு பொலிஸாரின் நெருக்கடிகளும், அச்சுறுத்தல்களும் தொடர்ந்தால் முகாம்களில் வசிக்கும் ஈழத்தமிழர்களைப் பாதுகாக்க தன்னுடைய தலைமையில் விரைவில் ஈரோட்டில் மாபெரும் போராட்டம் நடைபெறும் எனவும் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



# தேர்தல் ஆணையத்தை நம்பாவிட்டால் ராகுல் காந்தி பதவி விலகவேண்டும்

## பா.ஜ.க. வலியுறுத்தல்




இந்திய தேர்தல் ஆணையத்தின் மீது நம்பிக்கை இல்லாவிட்டால், ராகுல் காந்தி தார்மிக அடிப்படையில் தனது எம்.பி. பதவியை இராஜினமா செய்ய வேண்டும் என்று பா.ஜ.க. வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக டில்லியில் பா.ஜ.க. தலைமை அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் கவுரவ் பாட்டியா,

“இந்திய தேர்தல் ஆணையம் நடத்தும் தேர்தல்கள் மீது நம்பிக்கை இல்லை என்று ராகுல் காந்தி கூறி இருக்கிறார். அதோடு, இந்திய தேர்தல் ஆணையம் கோரியபடி, புகார் கடிதம் மற்றும் ஆவணத்தை வழங்கவும் மறுக்கிறார்.

அப்படியானால், தார்மிக அடிப்படையில் ராகுல் காந்தி தனது எம்.பி. பதவியை இராஜினாமா செய்ய வேண்டும். பிரியங்கா காந்தி மற்றும் சோனியா காந்தியும் தங்கள் எம்.பி. பதவியை இராஜினாமா செய்ய வேண்டும். அதன்பிறகு அவர்கள் உயர் நீதிமன்றம், உச்சி நீதிமன்றம் அல்லது மக்கள் மன்றத்துக்குச் செல்ல வேண்டும். காங்கிரஸ் உயர்மட்டத் தலைவர்களுக்கு இந்திய தேர்தல் ஆணையத்தின் மீது நம்பிக்கை இல்லை என்பதால், காங்கிரஸ் ஆளும் கர்நாடகா, தெலுங்கானா, இமாச்சலப் பிரதேசத்தின் முதல்வர்களும் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டும்.

உங்களுக்கு சௌகரியம் என்றால் அதை ஏற்றுக்கொள்கிறீர்கள். சிரமம் என்றால் நிராகரிக்கிறீர்கள். இத்தகைய அணுகுமுறை வேலை செய்யாது. இந்திய தேர்தல் ஆணையம் ஒரு பாரபட்சமற்ற அமைப்பு என்ற நற்பெயரை ஈட்டியுள்ளது. கடந்த கால உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் அதை உறுதிப்படுத்துகின்றன.

‘வாக்கு திருட்டு’ என்ற ராகுல் காந்தியின் கூற்று உண்மையற்றது. அராஜகமாகப் பேசக்கூடியவர் என அறியப்படும் ராகுல் காந்தி, தற்போது அழிவை ஏற்படுத்துபவராக ஆகிவிட்டார். அவர் இந்திய அரசமைப்பையும் இந்திய ஜனநாயகத்தையும் அழிக்க விரும்புகிறார். முதிர்ச்சியற்றவரான ராகுல் காந்தி, இந்திய தேர்தல் அதிகாரிகளை அச்சுறுத்துவதன் மூலம் அரசலமைப்பு நிறுவனங்களுக்கு எதிராகப் போரைத் தொடங்கியுள்ளார்.” என்று அவர் குற்றம் சாட்டினார்.

முன்னதாக, டில்லியில் உள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் பத்திரிகையாளர்களை சந்தித்து மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேசினார்.

அப்போது “மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ஜ.கவுடன் தேர்தல் ஆணையம் கூட்டு சேர்ந்து வாக்குகள் திருடப்பட்டுள்ளன. மகாராஷ்டிர சட்டப் பேரவைத் தேர்தலின் போது மாலை 5.30 மணிக்கு மேல் வாக்குப் பதிவு வழக்கத்துக்கு மாறாக அதிகரித்துள்ளது. கர்நாடகாவில் உள்ள ஒரு தொகுதியிலும் வாக்குகள் திருடப்பட்டுள்ளன.” என்று பகிரங்கமாக குற்றம்சாட்டி அவற்றுக்கு சில ஆதாரங்களை திரையிட்டு காட்டினார்.

# ஒகஸ்ட் 15ஆம் திகதி அலாஸ்காவில் புடினைச் சந்திக்கிறார் டொனால்ட் ட்ரம்ப்



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை சந்திக்கவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

இந்த சந்திப்பு ஒகஸ்ட் 15 ஆம் திகதி நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் அலாஸ்கா மாநிலத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளதாக ட்ரம்ப் தனது ட்ரூத் சோஷியல் தளத்தில் உறுதிப்படுத்தியுள்ளார்.

சந்திப்பில், உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையே பிரதேசங்களை பரிமாற்றம் செய்வது குறித்து விவாதிக்கப்படலாம் என ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

மூன்றரை ஆண்டுகளாகப் போராடப்பட்ட பிரதேசங்கள் குறித்து பேசுவோம். சில பிரதேசங்களை மீட்பது, சிலவற்றை பரிமாறுவது பற்றி பேச்சு நடக்கும்.

இது சிக்கலானது, ஆனால் இரு நாடுகளுக்கும் பயனளிக்கும் வகையில் முடிவு எடுக்கப்படும் என டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

2018 ஆம் ஆண்டு பின்லாந்தில் நடந்த சந்திப்புக்குப் பின்னர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் புடினுக்கு இடையேயான முதல் நேரடி சந்திப்பாகும்.

இந்நிலையில் புடின் மற்றும் டொனால்ட் ட்ரம்ப் சந்திப்பு உலக நாடுகள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஜப்பானிய குத்துச்சண்டை வீரர் காயம் காரணமாக உயிரிழப்பு

ஜப்பானிய குத்துச்சண்டை வீரரான சிகெடோசி கோட்டாரி உயிரிழந்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

28 வயதான இவர் காயங்கள் காரணமாக உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஒகஸ்ட் 2 ஆம் திகதி யமடோ ஹடாவ் என்ற வீரருடன் இடம்பெற்ற குத்துச்சண்டை போட்டியின் போது அவர் பலத்த காயமடைந்துள்ளார்.

இதனையடுத்து அவர் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தநிலையில் சிகிச்சைகள் பலனளிக்காத நிலையில் அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

முன்னதாக கடந்த பெப்ரவரியில் நடந்த குத்துச்சண்டைப் போட்டியின் போது, ஐரிஸ் வீரரான ஜோன் கூனி உயிரிழந்த நிலையில், இந்த ஆண்டில் பதிவான இரண்டாவது உயிரிழப்பாக இது பதிவாகியுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 10.08.2025




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை பெற்றுத் தரும். புனித யாத்திரை ஒன்றை மேற்கொள்வீர்கள். அது உங்களுக்கு திருப்தி உணர்வை அளிக்கும்.

நீங்கள் மிகவும் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு அங்கீகாரமும் பாரட்டும் கிடைக்கும்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்கள் துணையுடன் அன்பாக இருப்பீர்கள். உங்கள் உறவினர்களிடம் கலந்தாலோசித்து உங்கள் திருமணத்துக்காகத் திட்டமிடலாம்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சனையும் காணப்படாது. இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சுறுசுறுப்பாக காணப்படுவீர்கள். வெற்றி காண கடினமாக உழைக்க வேண்டும். சிறந்த தகவல் தொடர்பாடல் மூலம் நீங்கள் நல்ல பலனைப் பெறலாம்.

பணியிடச் சூழல் இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் பேச்சின் மூலம் சிறந்த வளர்ச்சி பெறுவீர்கள். இது உங்களுக்கு வழிகாட்ட உதவும்.

இன்று கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் காதலுக்கு உகந்த நாள் அல்ல. காதல் பாதிக்காமல் இருக்கவும் நன்கு வளரவும் புரிந்துணர்வு அவசியம்.

வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். வருவதைக் கொண்டு நிர்வகிக்க வேண்டும்.

பதற்றம் காரணமாக தோள் வலி மற்றும் எரிச்சல் காணப்படும். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று சாதாரணமான நாள். நீங்கள் பெரியவர்களைக் கூட மகிழ்விக்கும் இனிமையான வார்த்தைகளை பேசுவீர்கள். இறை மந்திரங்கள் சொல்வது இசை கேட்பது மன ஆறுதலை அளிக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்களுக்கு புதிய பணிகள் கொடுக்கப்படும். அது சவால்கள் நிறைந்ததாக இருக்கும்.

உங்கள் தந்தையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். குடும்ப அங்கத்தினர்களின் நல்லாதரவு பெறுவீர்கள். இன்று காதலர்களுக்கு உகந்த நாள் அல்ல.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இன்று கணிசமான தொகை பராமரிப்பீர்கள்.

ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று மிகவும் சிறப்பான நாளாக காணப்படாது. இன்று உங்கள் செயல்களை சிறப்பாக திட்டமிட வேண்டும். எந்த செயலையும் செய்வதற்கு முன் நன்கு யோசிக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். எதற்கும் உணர்ச்சி வசப்படாதீர்கள்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் அதிக பணிகளை சுமக்க நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் காதலை வெளிபடுத்த இது உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் இன்று அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக காணப்படாது. இன்று அதிக செலவுகள் காணப்படும்.




உங்கள் செயல்களை சீராக மேற்கொள்வதில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பது நல்லது.

உங்கள் பணிகள் பாராட்டைப் பெறும். உங்கள் பணிகளை நீங்கள் அனுசரித்து கவனமாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் சிறப்பான நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் காதலருடன் உங்கள் வாழ்கைக்கு திட்டமிடும் நாள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிக்க இயலும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் நம்பிக்கை எண்ணம் காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தில் பிரதி பலிக்கும்.




வெற்றி பெறுவதற்கான தைரியமும் உறுதியும் உங்களிடம் காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் பணிகளை திறமையுடன் ஆற்றுவீர்கள். உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள்.

காதலில் அன்பு மிகுந்து காணப்படும். உங்கள் துணையுடன் உங்கள் எதிர் கால வாழ்க்கைக்கு திட்டமிட உகந்த நாள்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு நீங்கள் ஊக்கத் தொகை பெறுவீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்றைய நாள் சராசரிக்கும் அதிகமான பலன்களை அளிக்கும். உங்கள் புத்திசாலித்தனத்தை நன்கு பயன்படுத்துவீர்கள். உங்கள் தரத்தை மேம்படுத்தவும் வெற்றி பெறவும் நீங்கள் முயற்சி எடுக்கலாம்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. நீங்கள் உங்கள் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருப்பீர்கள்.

உங்கள் துணையை சந்தித்து உங்கள் உறவை மேம்படுத்த முயல்வீர்கள். உங்கள் துணையுடன் வெளிப்படையாக இனிமையான வார்த்தைகளை பேசுவது சிறந்தது.

நீங்கள் சம்பாதித்த பணத்தை ஆன்மீகக் காரியங்களுக்காக பயன்படுத்துவீர்கள். இதன் மூலம் மனதிருப்தியை அடைவீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று மந்தமான நாளாக இருக்கும். உங்கள் உணர்ச்சி மற்றும் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கவனமாக முடிக்க நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் தாயுடன் கருத்து வேற்றுமை ஏற்படலாம்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று சில அசௌகரியங்கள் காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 10.08.2025




எதிர்பாராத வகையில் நன்மை கிடைபதற்கான வாய்ப்புள்ள நாள். இன்றைய சூழ்நிலைகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

இன்று பணியில் உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவ-ீர்கள். நீங்கள் மிகவும் கவனமுடன் பணியாற்றுவீர்கள்.

இன்று உங்கள் காதலருடன் திருமணம் நடக்க வாய்ப்புள்ளது. என்றாலும் சரியான பாதையில் முயற்சிக்க வேண்டும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று முழுவதும் நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று சராசரிக்கும் அதிகமான பலன்கள் கிடைக்கும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் நீங்கள் மன திருப்தி பெற இயலும்.

உங்களின் பணிகள் எந்த தடையும் இல்லாமல் நடக்க இன்று நீங்கள் பொறுமையை இழக்காமல் புத்திசாலித்தனத்துடன் செயல்பட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியான அனுபவமாக இருக்கும்.

பங்கு வர்த்தகம் போன்ற புதிய முதலீடுகள் திருப்தி அளிக்கும். இவற்றின் மூலம் திருப்தியான பண வரவு காணப்படும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று உங்களுக்கு சுமாரான பலன்கள் கிடைக்கும். உங்கள் மனதில் தேவையற்ற குழப்பங்கள் காணப்படும். இன்று அனுசரித்துப் போவது நல்லது. எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் இன்று சிறப்பாக பணியாற்றுவீர்கள். என்றாலும் சக பணியாளர்களுடன் வாக்குவாதங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது.

உங்கள் காதலருடன் இனிமையான தருணமாக காணப்படாது. வாக்குவாதம் எழ வாய்ப்புள்ளது.

நிதி நிலைமையில் மிதமான வளர்ச்சி காணப்படும். இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று சற்று மந்தமான நாள். எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் யோசிக்க வேண்டும். பலன்கள் நீங்கள் எதிர்பார்த்தபடி காணப்படாது. நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும். அதிகப் பணிகள் மற்றும் கவனக் குறைவே இதற்குக் காரணம்.

உங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதை கடினமாக உணர்வீர்கள். உங்கள் காதலருடன் சண்டை ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையிடம் வெளிப்படையாக அணுகுங்கள்.

இன்று பண விரயம் காணப்படும். தேவையற்ற செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.



# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இன்று; 307,951 மாணவர்கள் தோற்றுகின்றனர்

2025 ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இன்று நடைபெறவுள்ளது.

2,787 பரீட்சை மத்திய நிலையங்களில் பரீட்சையை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

இம்முறை புலமைப்பரிசில் பரீட்சையில் 307,951 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

பரீட்சை தினத்தில் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் திடீர் அனர்த்தங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

திடீர் அனர்த்தங்கள் ஏற்படுமாயின் 117 என்ற துரித இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி தகவல் அளிக்க முடியுமென அவர் தெரிவித்துள்ளார்.

பரீட்சை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன் பரீட்சார்த்திகள் 08.30 மணிக்கு பரீட்சை மத்திய நிலையங்களில் அமர வேண்டியது அவசியமெனவும் அவர் வலியுறுத்தினார்.

பரீட்சைக்கு தேவையான எழுதுகருவிகள் தவிர்ந்து ஏனைய பொருள்களை எடுத்து செல்வதை தவிர்க்குமாறும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

பரீட்சை நிலைய வளாகத்திற்குள் பரீட்சார்த்திகள், பரீட்சை பணிக்குழுவினர் தவிர்ந்த வேறு எவருக்கும் அனுமதி இல்லை எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.